# முகவுரை

தமிழகம் தொன்றுதொட்டு கலைகளைப் போற்றி வந்ததனையும், அவற்றில் சிறந்து விளங்கியதனையும், தமிழ் இலக்கியங்கள் வாயிலாக நாம் அறிகிறோம். தமிழ்மொழியையே இயல் இசை, நாடகம் என்னும் முத்தமிழாக்கிப் போற்றியவர்கள் தமிழ் மக்கள். தமிழக மக்களின் வழக்கில் இருந்த பல கலை வடிவங்கள் காலப்போக்கில் நலிந்தும் மறைந்தும் போகும் நிலைமையை மாற்றிப் பள்ளிப் பருவத்திலேயே மாணவர்களுக்கு கலைவிழா தொடர்பான போட்டிகளை பள்ளிக் கல்வித்துறை நடத்தி வந்தது. ஆனால் இவற்றில் ஆர்வம் குன்றியதால் தற்போது இப்போட்டிகளில் ஒரு தொய்வு நிலை காணப்படுகிறது.

இதற்கிடையே, மத்திய அரசின் புதிய முனைப்புத் திட்டமான கலா உத்சவ் – அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின்கீழ் 2015ஆம் ஆண்டு முதல் நடைமுறையில் உள்ளது.

இத்திட்டத்தின்கீழ் அரசு, அரசு உதவி பெறும் மற்றும் தனியார் பள்ளிகளில் 9 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்குப்பாரம்பரியம்மிக்க மற்றும் மறைந்து கொண்டிருக்கும் பழங்கால கலைகளுள் இசை, நடனம், நாடகம், மற்றும் காண்கலை ஆகிய நான்கு பிரிவில் மட்டும் கல்வி மாவட்ட, மாவட்ட, மாநில அளவில் போட்டிகளை நடத்தி அவற்றில் வென்றவர்களுள் ஒரு கலைப்பிரிவிற்கு ஓர் அணி வீதம் நான்கு அணியினர் ஒவ்வோர் ஆண்டும் புதுதில்லியில் நடைபெறும் தேசிய அளவிலான கலா உத்சவ் போட்டிகளில் கலந்து கொள்ள அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

அவ்வகையில், தமிழக மாணவர்கள் கடந்த 2015ஆம் ஆண்டு காண்கலைப் பிரிவிலும், 2016 இல் நாடகப்பிரிவிலும் தேசிய அளவிலான பரிசுகளைப் பெற்றுத் தமிழகத்தைப் பெருமைப்படுத்தியுள்ளனர்.

கலா உத்சவ் – உயர் நிலை மற்றும் மேனிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்தம் கலையார்வத்தைக் கிளர்ந்தெழச் செய்திருந்தாலும், இதனுள் குறிப்பிட்ட நான்குவகை கலைப்பிரிவில் உயர்நிலை, மேனிலை மாணவர்கள் மட்டுமே கலந்து கொள்ளலாம் என்னும் நிலையே உள்ளது. ஆய கலைகள் பலவற்றிலும், அனைத்து நிலை மாணவர்களும் பங்கேற்கும் நிலையை உருவாக்கும்வகையில் ஒரு கலை விழா அமைந்தால், அது பெரும்பான்மையான மாணவர்களுக்கு நல்லதொரு வாய்ப்பாக அமையும்.

இந்நிலையைக் கருத்திற் கொண்டும் ஒரு மாணவனின் மேம்பாடு என்பது கல்விசார் நிலையில் மட்டுமல்லாது கலை, கலாச்சாரம், விளையாட்டு, எனப் பல்வேறு கல்வி இணைச்

செயல்பாடுகளிலும் அமைய வேண்டும் என்பதனைக் கருத்திற் கொண்டும் தமிழகப் பள்ளிக் கல்வித் துறை – “தமிழகப் பள்ளிக் கலைத் திருவிழா’’ என்னும் திட்டத்தினை இந்தக் கல்வியாண்டான 2017–18ஆம் ஆண்டு தொடங்குவதற்கு முன் வந்திருக்கிறது.

தமிழகப் பள்ளிக் கலைத் திருவிழா – நூற்றுக்கும் மேற்பட்ட கலை வடிவங்களில் – மொழியாற்றல், பாரம்பரியம், செவ்வியல், நவீனம், ஆன்மீகம், கலாச்சாரம், கிராமியம், நாட்டுப்புறம் ஆகிய பல்வேறு பிரிவுகளில் – முதல் வகுப்புமுதல் பன்னிரண்டாம் வகுப்புவரை பயிலக் கூடிய மாணவர்களிடையே அவர்தம் தனித் திறனையும் குழுத்திறனையும் வளர்த்துக் கொள்வதற்கான போட்டிகளைத் தொடக்க நிலை, நடுநிலை, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகள் என நான்கு பிரிவில் நடத்தி அவற்றில் முதலிடம் பெறுவோர்க்கு ஒன்றியம், கல்வி மாவட்டம், மாவட்டம், மாநிலம் ஆகிய அடுத்தடுத்த நிலைகளில் தரமுடன் கூடிய திறனை வெளிப்படுத்துவோருக்கு அங்கீகாரமும், பாராட்டும், பரிசும் அளிப்பதற்கு இத்திட்டம் வழிகோலுகிறது.

பள்ளிக் கலைத் திருவிழா கேரளா முதலான மாநிலங்களில் வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகிறது. இதனால் பயனடைந்தோர் கலைத் துறை, திரைத்துறை மற்றும் ஊடகத் துறைகளில் உயரிய நிலைகளை அடைந்து, நன்மதிப்பைப் பெற்றுப் பெருமை கண்டு வருகின்றனர்.

நம் தமிழகத்திலும் தமிழகப் பள்ளிக் கலைத் திருவிழா வாயிலாகக் கலைத்திறன் வாய்க்கப்பெற்ற மாணவ, மாணவிகள் கண்டறியப்பட வேண்டும். அவர்தம் கலையாற்றல் குன்றின் மேலிட்ட விளக்காகச் சுடர் விட வேண்டும் என்பதே நம் அனைவரின் நோக்கமாக அமையப்பெற்றுத் தமிழகப் பள்ளிக் கலைத் திருவிழாத் திட்டத்தினை வெற்றிபெறச் செய்வோமாக!

**இயக்குநர்,**
**மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும்**
**பயிற்சி நிறுவனம்**

# இயல் – 1

## தமிழகப் பள்ளிக் கலைத் திருவிழா

**1.01** தமிழ்நாட்டில் பள்ளிக்கல்வித் துறையின்கீழ் இயங்கி வரும் அனைத்துவகைத் தொடக்கநிலை, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேனிலைப் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவ / மாணவிகளும் பங்கேற்கும் வகையிலான கலைநிகழ்ச்சிகள் "தமிழகப் பள்ளிக் கலைத் திருவிழா'' என்னும் பெயரில் நடத்தப்பெற உள்ளன. 2017–18ஆம் கல்வியாண்டில் தொடங்கி ஒவ்வோர் ஆண்டிலும் இக்கலைத் திருவிழா வெகு சிறப்பாக நடத்தப்பெறும்.

**1.02** கலைவிழாப் போட்டிகள் பின்வருமாறு நான்கு பிரிவில் (Category) நடத்தப்பெறுதல் வேண்டும்

| | | |
|---|---|---|
| பிரிவு 1 | : | முதல் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை (உட்பிரிவாக வகுப்புகள் I & II மற்றும் வகுப்புகள் III, IV & V) |
| பிரிவு 2 | : | ஆறு முதல் எட்டாம் வகுப்பு வரை |
| பிரிவு 3 | : | ஒன்பது, பத்தாம் வகுப்பு |
| பிரிவு 4 | : | பதினொன்று, பன்னிரண்டம் வகுப்பு |

**1.03** இந்நான்கு பிரிவில் நடைபெறும் போட்டிகள் பள்ளி நிலையில் தொடங்கி, அடுத்தடுத்த நிலைகளான கல்விமாவட்ட, வருவாய் மாவட்ட மற்றும் மாநில அளவிலான நிலைகளில் நடைபெறும். போட்டிகளில் ஒவ்வொரு நிலையிலும் தேர்வு பெற்றவர்கள் அடுத்தடுத்த நிலைகளில் கலந்துகொள்வர். ஆயினும் பிரிவு 1–இன்கீழ் நடைபெறும் போட்டிகள் ஒன்றிய நிலையிலும் பிரிவு 2இன் கீழ் நடைபெறும் போட்டிகள் கல்வி மாவட்டம் மற்றும் வருவாய் மாவட்ட அளவிலும், பிரிவு 3 மற்றும் 4 இன் கீழ் நடைபெறும் போட்டிகள் மாநில அளவிலும் சென்று நிறைவுபெறும்.

**1.04** இப்போட்டிகளில் கலந்துகொண்டு சிறப்பிடம் பெறுவோர்க்குத் தரமதிப்பு (Grade) வழங்கும்முறை பின்பற்றப்படும். 50%க்கும் குறைவான மதிப்பெண்கள் கிடைக்கும் போட்டியாளர்களுக்குத் தரமதிப்பு (Grade) கொடுக்கப்படமாட்டாது 50 மற்றும் 50%க்கும் மேல் மதிப்பெண் பெறும் போட்டியாளர்களுக்குக் கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின்படி தரமதிப்பு (Grade) வழங்கப்படும்.

| மதிப்பெண் (Marks) | தரம் (Grade) | தரமதிப்பு (Grade points) |
|---|---|---|
| 70%க்கு மேல் | A | **5** |
| 60%க்கு மேல் | B | **3** |
| 50%க்கு மேல் | C | **1** |

அனைத்து 4 பிரிவு மற்றும் 4 நிலையிலான போட்டிகளுக்கும் மேலே கொடுக்கப்பட்ட தரநிர்ணய விதி பொருந்தும்.

1.05 ஒரு போட்டியின் ஒரு நிலையில் உயர்ந்த தரநிலை / மதிப்பெண் பெறும் ஒருவர் அல்லது குழு மட்டுமே அப்போட்டியின் அடுத்த நிலையில் பங்குபெறத் தகுதி பெறுவார். எடுத்துக்காட்டாக ஒவ்வொரு பள்ளியிலும் ஒரு குறிப்பிட்ட போட்டியில் முதல்நிலை பெறும் ஒருவர் / குழு மட்டுமே அடுத்த நிலையில் போட்டிகளில் பங்கு பெற முடியும். இதேபோன்று அடுத்தடுத்த நிலைக்குப் போட்டியாளர்கள் அனுமதிக்கப்படுவர்.

1.06 ஒரு நிலையில் தேர்வு பெற்ற அணியின் விவரங்களைப் பள்ளிக்கல்வித் துறை வடிவமைத்திருக்கும் மென்பொருள் படிவத்தில் தயாரித்து அடுத்தடுத்த நிலை போட்டிகளுக்கு அனுப்ப வேண்டும். இது அந்தந்த நிலைகளின் தலைமை அமைப்பாளரின் பொறுப்பாகும்.

1.07 பிரிவு 3 மற்றும் 4இல் மாநில அளவிலான போட்டியில் கலந்துகொண்டு, அதிக மதிப்பெண்கள் பெறும் 3 போட்டியாளருக்கு ஒரு கலை இனத்திற்கு ரூ. 2,000/–, ரூ. 1,500/–, மற்றும் ரூ. 1,000/– வீதம் முறையே I,II,மற்றும் III ஆம் பரிசுகளாக வழங்கப் பெறும்.

1.08 பிரிவு 1இல் பேச்சுப்போட்டி மற்றும் கட்டுரைப் போட்டிக்கான தலைப்புகள் 5 நாள்களுக்கு முன்னர் கொடுக்கப்படும். பிரிவுகள் 2, 3, 4இல் பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டிக்கான தலைப்புகள் போட்டி நடைபெறுவதற்கு 5 நாள்களுக்கு முன்பே அறிவிக்கப்படும். (பேச்சுப் போட்டிக்கான தலைப்பினைக் குலுக்கல் முறையில் போட்டியாளர்கள் தேர்ந்தெடுக்க வேண்டும்)

109: போட்டி முடிவுகள் குறித்து அதற்கான நடுவர்களின் முடிவே இறுதியானது.

# இயல் –2

## பிரிவு 1இல் நடத்தப் பெறும் போட்டிகள்

**(முதல் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை)**

2.01 பிரிவு 1இல் நடத்தப்பெறும் போட்டிகள், பள்ளி மற்றும் ஒன்றிய அளவில் மட்டுமே நடைபெறும்.

2.02 1 முதல் 5 ஆம் வகுப்புவரை பயிலும் மாணவர்கள் மட்டுமே இதில் பங்கு பெறுவர். இவர்கள் வகுப்பு 1 மற்றும் 2இல் பயில்வோர் ஒருவகை மற்றும் 3, 4, 5இல் பயில்வோர் இன்னொரு வகை எனப் பகுக்கப்படுவர்.

2.03 மாணவ, மாணவிகளுக்குத் தனித்தனியாக எனப் போட்டிகள் நடைபெறா. ஆண், பெண் பாகுபாடின்றிப் பொதுப் போட்டியாக மட்டுமே நடைபெறும்.

2.04 கீழ்க்காணும் கலை இனங்களில் (item) போட்டிகள் நடைபெறும்

| வ. எண் | கலை இனம் | நேரம் | வகுப்பு |
|---|---|---|---|
| 1 | பேச்சுப் போட்டி (கொடுக்கப்படும் தலைப்பில்) | 5 மணித்துளி | III to V |
| 2 | கட்டுரைப் போட்டி (கொடுக்கப்படும் தலைப்பில்) | 60 மணித்துளி | III to V |
| 3 | ஒப்புவித்தல் போட்டி– மழலையர் பாடல் (தமிழ்) | 5 மணித்துளி | I & II |
| 4 | நாட்டுப்புற நடனம் (குழு) | 10 மணித்துளி | III to V |
| 5 | கதை கூறுதல் | 5 மணித்துளி | I & II |
| 6 | பழமொழிகள் கூறுதல் | 5 மணித்துளி | I & II |
| 7 | பரத நாட்டியம் (குழு) | 10 மணித்துளி | III to V |
| 8 | ஆத்திசூடி ஒப்புவித்தல் | 5 மணித்துளி | I & II |
| 9 | திருக்குறள் ஒப்புவித்தல் | 5 மணித்துளி | I to V |
| 10 | வண்ணம் தீட்டுதல் | 30 மணித்துளி | I & II |
| 11 | வரைந்து வண்ணம் தீட்டுதல் | 60 மணித்துளி | III to V |
| 12 | மெல்லிசை – தனிப்பாடல் | 5 மணித்துளி | III to V |
| 13 | செவ்வியல் இசை – தனிப்பாடல் | 10 மணித்துளி | III to V |
| 14 | ஒரு நபர் நாடகம் | 5 மணித்துளி | III to V |
| 15 | குழு நடனம் ( 7 - 9 பேர்) | 10 மணித்துளி | III to V |

| | | | |
|---|---|---|---|
| 16 | தேச பக்தி பாடல்கள் (7 - 9 பேர்) | 8 மணித்துளி | III to V |
| 17 | களிமண் பொம்மைகள் | 60 மணித்துளி | III to V |
| 18 | Recitation – Rhymes | 5 மணித்துளி | I & II |
| 19 | மாறுவேடப் போட்டி | 5 மணித்துளி | I to V |
| 20 | அழகுக் கையெழுத்து | 20 மணித்துளி | I & II and III to V |
| 21 | Good Handwriting | 10 மணித்துளி | I & II and III to V |

**குறிப்பு: மெல்லிசை –** ஆழ்ந்த இசை ஞானம் தேவையில்லாத இனிய மெட்டுகளில் அமைந்த இரசனைக்குரிய பாடல்களைப் பாடுதல். இவற்றில் திரைப்படப் பாடல்கள் தவிர்க்கப்படவேண்டும்.

**2.05** a) மேற்கண்ட போட்டிகளில் முதல் மதிப்பெண் பெற்ற தனியாளோ, குழுவோ ஒரு கலைப்பிரிவிற்கு ஒருவர் என்னும் நிலையில் ஒன்றிய அளவிலான போட்டியில் பங்கு பெற தகுதியுடையவர் ஆவர்.

b) ஒவ்வொரு கலை இனத்திலும் முதல், இரண்டு, மூன்றாம் நிலைக்குத் தேர்வானவர்களுக்குப் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட வேண்டும்.

**2.06** a) ஒரே போட்டியாளர் பல கலை இனங்களில் கலந்துகொள்ள விரும்பும்போது, அவர் தனியாள் போட்டியில் 3 கலை இனத்திலும் குழுப் போட்டியில் 2 கலை இனத்திலும் மட்டுமே அதிகபட்சமாக கலந்துகொள்ள முடியும்.

b) ஒருவர் பல்வேறு போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்றிருந்தால் ‘வெற்றி முதல்வன் (Champion)’ என அறிவிக்கப்பட்டு பாராட்டப்படுவார்.

**2.07** போட்டிகளில் கலந்து கொள்ளும் போட்டியாளர் / குழுவினர் எண்ணிக்கையில் மிகுதியாக இருக்கும் நிலையில் அக்கிராமத்தில் உள்ள பள்ளிகள் அனைத்தையும் ஒருங்கிணைத்துக் கிராம மக்கள் அனைவரின் மனமகிழ்விற்காகக் ‘கிராமியக் கலைத் திருவிழா’ நடத்துவதுபற்றியும் – பள்ளித் தலைமையாசிரியர்கள் கலந்தாலோசிக்கலாம்.

**2.08** பிரிவு 1இல் குறிப்பிடப்பட்ட போட்டிகள் (வகுப்பு 1 முதல் 5 வரை) பள்ளி நிலைக்கு அடுத்து ஒன்றிய அளவிலான நிலையில் இறுதிப் போட்டிகள் நடத்தப்பட்டு நிறைவு பெறும்.

**2.09** முதல் மற்றும் இரண்டாம் வகுப்புக்கு ஒருவகையான கலை இனங்களிலும், **3, 4** மற்றும் **5**ஆம் வகுப்புக்கு வேறு வகையான கலை இனங்களிலும் அவர்தம் திறனுக்கு ஏற்ப அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளவாறு போட்டிகள் நடத்தப்பட வேண்டும்.

# இயல் – 3

## பிரிவு 2 இல் நடத்தப்பெறும் போட்டிகள்
### (ஆறு முதல் எட்டாம் வகுப்பு வரை)

**3.01** பிரிவு 2இல் நடத்தப்பெறும் போட்டிகள் பள்ளி, கல்வி மாவட்டம் மற்றும் மாவட்டம் ஆகிய மூன்று நிலையில் நடத்தப்படும். ஒரு நிலையில் முதல் தகுதி பெற்று பரிந்துரைக்கப்படுபவர் அடுத்தடுத்த நிலைகளில் கலந்துகொள்ளத் தகுதி பெற்றவராகக் கருதப்படுவார்.

**3.02** ஆறுமுதல் எட்டாம் வகுப்புவரை பயிலும் மாணவர்கள் மட்டுமே இப்போட்டிகளில் பங்கு பெற இயலும். நடுநிலை / உயர்நிலை மற்றும் மேனிலைப் பள்ளிகளில், இவ்வகுப்புகளில் பயிலும் அனைத்து மாணவர்களும் இவற்றில் பங்கு பெறலாம்.

**3.03** ஆண்கள் அல்லது பெண்கள் எனக் குறிப்பிடப்பட்ட போட்டிகள் தவிர, பிறவற்றில் இருபாலரும் கலந்து கொள்ளலாம்.

**3.04** கீழ்வரும் கலை இனங்களில் போட்டிகளை நடத்தலாம்.

| | | |
|---|---|---|
| 1. | கதை எழுதுதல் (தமிழ்) | 90 மணித்துளி |
| 2. | கதை எழுதுதல் (ஆங்கிலம் ) | 90 மணித்துளி |
| 3. | கவிதை புனைதல் | 90 மணித்துளி |
| 4. | கும்மி நடனம் (7–9 பேர்) ஆண்கள் | 10 மணித்துளி |
| 5. | தனி நடனம் | 10 மணித்துளி |
| 6. | குழு நடனம் (7 – 9 பேர்) | 10 மணித்துளி |
| 7. | தேசபக்தி பாடல் (7 – 9 பேர்) – குழுப்பாட்டு | 10 மணித்துளி |
| 8. | நாடகம் (10 பேர்) | 30 மணித்துளி |
| 9. | பேச்சுப்போட்டி (தமிழ் ) (கொடுக்கப்படும் தலைப்பில்) | 5 மணித்துளி |
| 10. | பேச்சுப்போட்டி (ஆங்கிலம்) (கொடுக்கப்படும் தலைப்பில்) | 5 மணித்துளி |
| 11. | கும்மி ஆட்டம் (பெண்கள் மட்டும்) | 10 மணித்துளி |
| 12. | திருக்குறள் ஒப்பித்தல் | 5 மணித்துளி |
| 13. | நகைச்சுவை வழங்குதல் | 5 மணித்துளி |
| 14. | Recitation English - Poem | 5 மணித்துளி |
| 15. | மெல்லிசை – தனிப்பாட்டு | 5 மணித்துளி |

| | | |
|---|---|---|
| 16. | செவ்வியல் இசை – தனிப்பாட்டு | 10 மணித்துளி |
| 17. | கிராமிய நடனம் (7–9 பேர்) | 10 மணித்துளி |
| 18. | மனத்தில் பதிந்த இயற்கைக் காட்சியை வரைதல் | 90 மணித்துளி |
| 19. | ஒரு நபர் நாடகம் | 10 மணித்துளி |
| 20. | வில்லுப்பாட்டு (1 + 4 பேர்) | 20 மணித்துளி |
| 21. | கதை சொல்லுதல் | 10 மணித்துளி |
| 22. | களிமண் சுதை வேலைப்பாடு | 120 மணித்துளி |
| 23. | செதுக்குச் சிற்பம் (காய்கறி / சோப்பு / மெழுகு / சுண்ணக்கட்டி, போன்ற பிற பொருள்கள்) | 120 மணித்துளி |
| 24. | பரத நாட்டியம் – தனியொருவர் | 10 மணித்துளி |
| 25. | பரதநாட்டியம் (குழு 7– 9 பேர்) | 10 மணித்துளி |

**குறிப்பு: மெல்லிசை** – ஆழ்ந்த இசை ஞானம் தேவையில்லாத இனிய மெட்டுகளில் அமைந்த இரசனைக்குரிய பாடல்களைப் பாடுதல். இவற்றில் திரைப்படப் பாடல்கள் தவிர்க்கப்படவேண்டும்.

**3.05** பள்ளி நிலையில் A தரத்தில் முதல் மதிப்பெண் பெற்ற தனி நபர் போட்டியாளர்களும் குழுவினரும் – இனம் ஒன்றிற்கு ஒருவர் அல்லது ஓர் அணி எனக்கல்வி மாவட்ட அளவிலான போட்டியில் பங்குபெறத் தகுதி பெறுவர். இதே முறை (system) அடுத்தடுத்த நிலையிலான போட்டிகளுக்கும் பொருந்தும்.

**3.06** ஒருவர் எவையேனும் 3 தனிப்போட்டி மற்றும் இரண்டு குழுப்போட்டியில் மட்டுமே பங்குபெறமுடியும்.

**3.07** ஒருவர் பல்வேறு போட்டிகளில் கலந்து கொள்கிற போது தகுதிபெற்ற ஒருவர் ‘வெற்றி முதல்வன் (Champion)’ என அறிவிக்கப்பட்டு பாராட்டப்படுவார்.

# இயல் – 4

## பிரிவு 3 இல் நடத்தபெறும் போட்டிகள்

**( ஒன்பது,பத்தாம் வகுப்புகள்)**

4.01 பிரிவு 3 அளவிலான போட்டிகள் பள்ளி, கல்வி மாவட்டம், மாவட்டம் மற்றும் மாநிலம் என நான்கு நிலையிலும் நடத்தப்படும்.

4.02 தமிழ்நாட்டில் இயங்கும் அனைத்து வகையான பள்ளிகளிலும் 9 மற்றும் 10ஆம் வகுப்பில் பயிலும் மாணவ, மாணவியர் இப்போட்டிகளில் பங்குபெறுவர்.

4.03 கீழே உள்ள அட்டவணைப்படி போட்டிகள் 9 வகையில் நடைபெறும்.

### வகை - 1 : கவின்கலை / நுண்கலை

| வ. எண். | இனம் | நேரம் |
|---|---|---|
| 1. | தலைப்பை ஒட்டி வரைதல் | 120 மணித்துளி |
| 2. | எதிர்காலக் கனவை வரைதல் | 120 மணித்துளி |
| 3. | இலக்கியக் காட்சிகள் – ஒவியம் வரைதல் | 120 மணித்துளி |
| 4. | நவீன ஓவியம் (Modern Drawing) | 120 மணித்துளி |
| 5. | கார்ட்டூன் – கேலிச்சித்திரம் | 60 மணித்துளி |
| 6. | பானை ஓவியம் | 60 மணித்துளி |
| 7. | கோலமிடுதல் (தரையில்) | 60 மணித்துளி |
| 8. | வண்ணக் கோலம் (தரையில்) | 60 மணித்துளி |
| 9. | களிமண் சிற்பம் | 60 மணித்துளி |
| 10. | மணல் சிற்பம் | 60 மணித்துளி |
| 11. | காகிதக்கூழ் பொருள்கள் | 60 மணித்துளி |
| 12. | செதுக்குச் சிற்பம் (காய்கறி / சோப்பு / மெழுகு / சுண்ணக்கட்டி, போன்ற பிற பொருள்கள்) | 120 மணித்துளி |
| 13. | Photography | 120 மணித்துளி |
| 14. | Digital Art | 120 மணித்துளி |

### வகை - 2 : இசை (வாய்ப்பாட்டு)

| வ. எண். | இனம் | நேரம் |
|---|---|---|
| 1. | நாட்டுப்புறப்பாடல் (ஆண்) | 5 மணித்துளி |
| 2. | நாட்டுப்புறப்பாடல் (பெண்) | 5 மணித்துளி |
| 3. | வில்லுப்பாட்டு (1 + 4 பேர்) | 10 மணித்துளி |
| 4. | தேசபக்தி பாடல் 7–9 பேர் (பொது) | 10 மணித்துளி |
| 5. | மெல்லிசை ( பெண்) | 5 மணித்துளி |
| 6. | மெல்லிசை ( ஆண்) | 5 மணித்துளி |
| 7. | கொன்னக்கோல் | 10 மணித்துளி |
| 8 | கருநாடக இசை (பெண்) | 10 மணித்துளி |
| 9. | கருநாடக இசை (ஆண்) | 10 மணித்துளி |

**குறிப்பு: மெல்லிசை** – ஆழ்ந்த இசை ஞானம் தேவையில்லாத இனிய மெட்டுகளில் அமைந்த இரசனைக்குரிய பாடல்களைப் பாடுதல். இவற்றில் திரைப்படப் பாடல்கள் தவிர்க்கப்படவேண்டும்.

## வகை – 3 கருவி இசை – தோற் கருவி

| வ. எண். | இனம் | நேரம் |
|---|---|---|
| 1. | பம்பை / உருமி / உடுக்கை | 10 மணித்துளி |
| 2. | பறை | 10 மணித்துளி |
| 3. | மிருதங்கம் / கஞ்சிரா/கடம் | 10 மணித்துளி |
| 4. | தபேலா | 10 மணித்துளி |
| 5. | தவில் | 10 மணித்துளி |
| 6. | Triple Drum / Drums | 15 மணித்துளி |
| 7. | செண்டை மேளம் (Chenda) | 10 மணித்துளி |

## வகை – 4 கருவி இசை – துளை – காற்றுக் கருவிகள்

| வ. எண். | இனம் | நேரம் |
|---|---|---|
| 1. | நாதஸ்வரம் | 10 மணித்துளி |
| 2. | புல்லாங்குழல் | 10 மணித்துளி |
| 3. | Clarinet | 10 மணித்துளி |
| 4. | Harmonium | 10 மணித்துளி |
| 5. | Saxaphone | 10 மணித்துளி |
| 6. | கோண கொம்பு (Kona Kombu) | 10 மணித்துளி |
| 7. | ஜலதரங்கம் (Jalatharangam) | 10 மணித்துளி |
| 8. | Keyboard | 10 மணித்துளி |

## வகை – 5 கருவி இசை – தந்திக் கருவிகள்

| வ. எண். | இனம் | நேரம் |
|---|---|---|
| 1. | புல்புல்தாரா | 10 மணித்துளி |
| 2. | வயலின் | 10 மணித்துளி |
| 3. | வீணை / விசித்ரவீணை அல்லது கோட்டு வாத்தியம் | 10 மணித்துளி |
| 4. | Guitar | 10 மணித்துளி |
| 5. | Mandolin | 10 மணித்துளி |
| 6. | மொகர்சிங் (Morsing) | 10 மணித்துளி |

**வகை – 6 இசைச் சங்கமம்**

| வ. எண். | இனம் | நேரம் |
|---|---|---|
| 1. | தவில், நாதஸ்வரம் கச்சேரி | 20 மணித்துளி |
| 2. | நாத சங்கமம் (வாத்திய இசை) | 20 மணித்துளி |
| 3. | பேண்டு வாத்தியம் 10–20 பேர் | 20 மணித்துளி |
| 4. | Orchestra 9 பேர் | 20 மணித்துளி |

**வகை – 7 நடனம்**

| வ. எண். | இனம் | நேரம் |
|---|---|---|
| 1. | நாட்டுப்புற நடனம் (7–9 பேர்) பெண் | 10 மணித்துளி |
| 2. | நாட்டுப்புற நடனம் (7–9 பேர்) ஆண் | 10 மணித்துளி |
| 3. | கரகாட்டம் (குழு) | 10 மணித்துளி |
| 4. | கணியன்கூத்து (குழு) | 10 மணித்துளி |
| 5. | ஒயிலாட்டம் (குழு) | 10 மணித்துளி |
| 6. | தேவராட்டம் (குழு) | 10 மணித்துளி |
| 7. | கோலாட்டம் (குழு) | 10 மணித்துளி |
| 8. | பொம்மலாட்டம் (தோற்பாவை, மரப்பாவை, நிழற்பாவை) | 30 மணித்துளி |
| 9. | குழு நடனம் (7–9 பேர்) ஆண் | 10 மணித்துளி |
| 10. | குழு நடனம் (7–9 பேர்) பெண் | 10 மணித்துளி |
| 11. | பரதநாட்டியம் – பெண் | 10 மணித்துளி |
| 12. | பரதநாட்டியம் – ஆண் | 10 மணித்துளி |
| 13. | பரதநாட்டியம் – குழு (7–9 பேர்) | 10 மணித்துளி |
| 14. | பிற மாநில நாட்டியம் – தனி | 10 மணித்துளி |
| 15. | பிற மாநில நாட்டியம் – குழு | 10 மணித்துளி |

**வகை – 8 நாடகம்**

| வ. எண். | இனம் | நேரம் |
|---|---|---|
| 1. | தெருக்கூத்து – 10 பேர் | 30 மணித்துளி |
| 2. | சமூக நாடகம் – 10 பேர் | 30 மணித்துளி |
| 3. | இலக்கிய நாடகம் – 10 பேர் | 30 மணித்துளி |
| 4. | தனிநபர் நடிப்பு – ஆண் | 15 மணித்துளி |
| 5. | தனிநபர் நடிப்பு – பெண் | 15 மணித்துளி |
| 6. | பல குரல் பேச்சு (Mimicry) – ஆண் | 10 மணித்துளி |
| 7. | பல குரல் பேச்சு (Mimicry) – பெண் | 10 மணித்துளி |
| 8. | வீதி நாடகம் – 10 பேர் | 30 மணித்துளி |
| 9. | Miming-(7-9 பேர்) குழு | 20 மணித்துளி |
| 10. | Miming-தனி | 10 மணித்துளி |

## வகை - 9 மொழித்திறன்

| வ. எண். | இனம் | நேரம் |
|---|---|---|
| 1. | பேச்சுப்போட்டி – (தமிழ்) | 7 மணித்துளி |
| | அ. உடன் தலைப்பில் பேசுதல் | |
| | ஆ. இலக்கியச் சொற்பொழிவு | |
| | இ. துலைப்பை ஒட்டி/வெட்டி பேசுதல் | |
| 2. | பேச்சுப்போட்டி – (ஆங்கிலம்) On already given topic | 7 மணித்துளி |
| 3. | திருக்குறள் ஒப்புவித்தல் (அதிகாரம் வாரியாக) | 10 மணித்துளி |
| 4. | கவிதை சொல்லுதல் (தமிழ்) | 7 மணித்துளி |
| 5. | கதை எழுதுதல் – தமிழ் | 90 மணித்துளி |
| 6. | கட்டுரைப் போட்டி – தமிழ் | 90 மணித்துளி |
| | அ. கொடுக்கப்படும் தலைப்பில் கட்டுரை வரைதல். | |
| | ஆ. மேடையில் உரையாற்றுவதற்கேற்ற சொற்பொழிவு தயாரித்தல். | |
| | இ. பிகழ்ச்சிகளுக்கு வரவேற்புரை / நன்றியுரை தயாரித்தல். | |
| | ஈ. நாளேடுகளுக்கு தலையங்கம் எழுதுதல். | |
| | உ. பள்ளி ஆண்டு மலருக்கு கட்டுரை வரைதல். | |
| 7. | கட்டுரைப் போட்டி – (ஆங்கிலம்) On already given topic | 90 மணித்துளி |
| 8. | கவிதை புனைதல் – தமிழ் | 90 மணித்துளி |
| 9. | பாடல் ஒப்புவித்தல் (பாரதி, பாரதிதாசன் மற்றும் பிற தமிழ்க் கவிஞர்களின் பாடல்கள்) | 10 மணித்துளி |
| 10. | Poem Recitation English | 10 மணித்துளி |
| 11. | பிற மாநில மொழிகள் – கவிதை சொல்லுதல் | 10 மணித்துளி |
| 12. | விவாத மேடை (அதிகபட்சம் 5 பேர்) கொடுக்கப்படும் தலைப்பு சார்ந்து விவாதித்தல் | 30 மணித்துளி |
| 13 | இணைய கருத்துருவாக்கம் (Digital Content Development) | 60 மணித்துளி |

**4.04** பள்ளி நிலையில் A தரத்தில் அதிக மதிப்பெண் பெற்ற தனிநபர் போட்டியாளர்களும் குழுவினரும் – இனம் ஒன்றிற்கு ஒருவர் அல்லது ஓர் அணி எனக்கல்வி மாவட்ட அளவிலான போட்டியில் பங்குபெற தகுதி பெறுவர். இதே முறை (system) அடுத்தடுத்த நிலையிலான போட்டிகளுக்கும் உரித்தாகும்.

**4.05** ஒருவர், எவையேனும் மூன்று தனிப்போட்டி மற்றும் இரண்டு குழுப் போட்டியில் மட்டுமே அதிகபட்சமாக பங்குபெற முடியும்.

**4.06** ஒரு நபர் பல்வேறு போட்டிகளில் கலந்து கொள்கிற போது தகுதிபெற்ற ஒருவர் 'வெற்றி முதல்வன்' (Champion) என அறிவிக்கப்பட்டுப் பாராட்டப்படுவார்.

# இயல் – 5

## பிரிவு: 4இல் நடத்தப்பெறும் போட்டிகள்
**(பதினொன்று ,பன்னிரண்டாம் வகுப்பு)**

5.01 பள்ளி, கல்வி மாவட்டம், மாவட்டம் மற்றும் மாநில அளவில் பிரிவு 4-இல் குறிப்பிடப்பெறும் போட்டிகள் நடத்தப்பட வேண்டும்.

5.02 ஏதேனும் ஒரு பள்ளியில் 11 மற்றும் 12ஆம் வகுப்பில் படிக்கும் மாணவ / மாணவியர் இப்போட்டிகளில் பங்கு பெறலாம்.

5.03 போட்டிக்கான கலை இனங்கள் கீழ்வருமாறு 9 வகையாக கொடுக்கப்பட்டுள்ளன.

**வகை – 1 காண்கலை / நுண்கலை**

| வ. எண். | இனம் | நேரம் |
|---|---|---|
| 1. | தலைப்பை ஒட்டி வரைதல் | 120மணித்துளி |
| 2. | எதிர்காலக்கனவை வரைதல் | 120 மணித்துளி |
| 3. | கேலிச் சித்திரம் (Cartoon) | 60 மணித்துளி |
| 4. | நவீன ஓவியம் (Modern Art) | 120 மணித்துளி |
| 5. | காகித வேலை – கொலாஜ் | 90 மணித்துளி |
| 6. | களிமண் சிற்பம் | 120 மணித்துளி |
| 7. | மணல் சிற்பம் | 120 மணித்துளி |
| 8. | காகிதக்கூழ் பொருள்கள் | 120 மணித்துளி |
| 9. | செதுக்குச் சிற்பம் (காய்கறி / சோப்பு / மெழுகு / சுண்ணக்கட்டி, போன்ற பிற பொருள்கள்) | 120 மணித்துளி |
| 10. | Photography | 120 மணித்துளி |
| 11. | Digital art | 120 மணித்துளி |

**வகை – 2 இசை வாய்ப்பாட்டு**

| வ. எண். | இனம் | நேரம் |
|---|---|---|
| 1. | நாட்டுப்புறப் பாட்டு – பெண் | 5 மணித்துளி |
| 2. | நாட்டுப்புறப் பாட்டு – ஆண் | 5 மணித்துளி |
| 3. | மெல்லிசை – ஆண் | 5 மணித்துளி |
| 4. | மெல்லிசை – பெண் | 5 மணித்துளி |
| 5. | கருநாடக இசை– வாய்ப்பாட்டு (பெண்) | 10 மணித்துளி |
| 6. | கருநாடக இசை– வாய்ப்பாட்டு (ஆண்) | 10 மணித்துளி |

**வகை – 3 கருவி இசை, தோற் கருவி**

| வ. எண். | இனம் | நேரம் |
|---|---|---|
| 1. | பறை | 10 மணித்துளி |
| 2. | முரசு | 10 மணித்துளி |
| 3. | தவண்டை | 10 மணித்துளி |
| 4. | தக்கை | 10 மணித்துளி |
| 5. | பம்பை / உருமி/உடுக்கை | 10 மணித்துளி |
| 6. | தவில் | 10 மணித்துளி |
| 7. | துபேலா | 10 மணித்துளி |
| 8. | மிருதங்கம் | 10 மணித்துளி |
| 9. | Triple Drum / Drums | 10 மணித்துளி |
| 10. | செண்டை மேளம் (chenda) | 10 மணித்துளி |

**வகை – 4 கருவி இசை – துளை/ காற்றுக்கருவி**

| வ. எண். | இனம் | நேரம் |
|---|---|---|
| 1. | கொக்கறை | 10 மணித்துளி |
| 2. | நெடுந்தாரை | 10 மணித்துளி |
| 3. | எக்காளம் | 10 மணித்துளி |
| 4. | கொம்புத்தாரை | 10 மணித்துளி |
| 5. | திருச்சின்னம் | 10 மணித்துளி |
| 6. | துத்தேரி | 10 மணித்துளி |
| 7. | சங்கு முழக்குதல் | 10 மணித்துளி |
| 8. | புல்லாங்குழல் | 10 மணித்துளி |
| 9. | நாதஸ்வரம் | 10 மணித்துளி |
| 10. | கிளாரிநெட் | 10 மணித்துளி |
| 11. | Saxaphone | 10 மணித்துளி |
| 12. | Harmonium | 10 மணித்துளி |
| 13 | Melodica | 10 மணித்துளி |
| 15. | கோணகொம்பு (Kona kombu) | 10 மணித்துளி |
| 16. | ஜலதரங்கம் (Jalatharangam) | 10 மணித்துளி |
| 17. | Keyboard | 10 மணித்துளி |

## வகை – 5 கருவி இசை – தந்திக் கருவி

| வ. எண் | இனம் | நேரம் |
|---|---|---|
| 1. | புல்புல்தாரா வாத்தியம் | 10 மணித்துளி |
| 2. | கிட்டார் | 10 மணித்துளி |
| 3. | வயலின் | 10 மணித்துளி |
| 4. | வீணை / விசித்திர வீணை அல்லது கோட்டு வாத்தியம் | 10 மணித்துளி |
| 5. | Mandolin | 10 மணித்துளி |
| 6. | மொகர்சிங் (Morsing) | 10 மணித்துளி |

## வகை – 6 இசைச் சங்கமம்

| வ. எண். | இனம் | நேரம் |
|---|---|---|
| 1. | தவில் – நாதஸ்வர கச்சேரி (குழு) | 10 மணித்துளி |
| 2. | நாத சங்கமம் – வாத்திய இசை (குழு) | 10 மணித்துளி |
| 3. | பேண்டு வாத்தியம் (குழு 10–20 பேர்) | 20 மணித்துளி |
| 4. | ஆர்கெஸ்ட்ரா (குழு – 9 பேர்) | 20 மணித்துளி |

## வகை – 7 நடனம்

| வ. எண். | இனம் | நேரம் |
|---|---|---|
| 1. | கணியன்கூத்து (குழு) (7–9 பேர்) | 10 மணித்துளி |
| 2. | கரகாட்டம் (குழு) (7–9 பேர்) | 10 மணித்துளி |
| 3. | ஒயிலாட்டம் (குழு) (7–9 பேர்) | 10 மணித்துளி |
| 4. | தேவராட்டம் (குழு) (7–9 பேர்) | 10 மணித்துளி |
| 5. | கோலாட்டம் (7–9 பேர்) | 10 மணித்துளி |
| 6. | நாட்டுப்புற நடனம் (7–9 பேர்) பெண் | 10 மணித்துளி |
| 7. | நாட்டுப்புற நடனம் (7–9 பேர்) ஆண் | 10 மணித்துளி |
| 8. | பொம்மலாட்டம் (தோற்பாவை, மரப்பாவை, நிழற்பாவை) | 30 மணித்துளி |
| 9. | குழு நடனம் (7–9 பேர்) பெண் | 10 மணித்துளி |
| 10. | குழு நடனம் (7–9 பேர்) ஆண் | 10 மணித்துளி |
| 11. | பரதநாட்டியம் – ஆண் | 10 மணித்துளி |
| 12. | பரதநாட்டியம் – பெண் | 10 மணித்துளி |
| 13. | பரத நாட்டியம் (குழு) | 10 மணித்துளி |
| 14. | பிற மாநில நாட்டியம் – தனி | 10 மணித்துளி |
| 15.. | பிற மாநில நாட்டியம் – குழு | 10 மணித்துளி |

## வகை – 8 நாடகம்

| வ. எண். | இனம் | நேரம் |
|---|---|---|
| 1. | தெருக்கூத்து – 10 பேர் | 30 மணித்துளி |
| 2. | சமூக நாடகம் – 10 பேர் | 30 மணித்துளி |
| 3. | இலக்கிய நாடகம் – 10 பேர் | 30 மணித்துளி |
| 4. | தனிநபர் நடிப்பு – பெண் | 15 மணித்துளி |
| 5. | தனிநபர் நடிப்பு – ஆண் | 15 மணித்துளி |
| 6. | பல குரல் பேச்சு (Mimicry) – பெண் | 10 மணித்துளி |
| 7. | பல குரல் பேச்சு (Mimicry) – ஆண் | 10 மணித்துளி |
| 8. | வீதி நாடகம் – 10 பேர் | 30 மணித்துளி |
| 9. | Miming-(7-9) - குழு | 20 மணித்துளி |
| 10. | Miming-தனி | 10 மணித்துளி |

## வகை - 9 மொழித்திறன்

| வ. எண். | இனம் | நேரம் |
|---|---|---|
| 1. | பேச்சுப்போட்டி – (தமிழ்) | 7 மணித்துளி |
| | அ. உடன் தலைப்பில் பேசுதல் | |
| | ஆ. இலக்கியச் சொற்பொழிவு | |
| | இ. துலைப்பை ஒட்டி/வெட்டி பேசுதல் | |
| 2. | பேச்சுப்போட்டி – (ஆங்கிலம்) On already given topic | 7 மணித்துளி |
| 3. | திருக்குறள் ஒப்புவித்தல் (அதிகாரம் வாரியாக) | 10 மணித்துளி |
| 4. | கவிதை சொல்லுதல் (தமிழ்) | 7 மணித்துளி |
| 5. | கதை எழுதுதல் – தமிழ் | 90 மணித்துளி |
| 6. | கட்டுரைப் போட்டி – தமிழ் | |
| | அ. கொடுக்கப்படும் தலைப்பில் கட்டுரை வரைதல். | |
| | ஆ. மேடையில் உரையாற்றுவதற்கேற்ற சொற்பொழிவு தயாரித்தல். | |
| | இ. பிகழ்ச்சிகளுக்கு வரவேற்புரை / நன்றியுரை தயாரித்தல். | |
| | ஈ. நாளேடுகளுக்கு தலையங்கம் எழுதுதல். | |
| | உ. பள்ளி ஆண்டு மலருக்கு கட்டுரை வரைதல். | |
| 7. | கட்டுரைப் போட்டி – (ஆங்கிலம்) On already given topic | |

| | | |
|---|---|---|
| 8. | கவிதை புனைதல் – தமிழ் | |
| 9. | பாடல் ஒப்புவித்தல் (பாரதி, பாரதிதாசன் மற்றும் பிற தமிழ்க் கவிஞர்களின் பாடல்கள்) | 10 மணித்துளி |
| 10. | Poem Recitation English | 10 மணித்துளி |
| 11. | பிற மாநில மொழிகள் – கவிதை சொல்லுதல் | 10 மணித்துளி |
| 12. | விவாத மேடை (அதிகபட்சம் 5 பேர்) கொடுக்கப்படும் தலைப்பு சார்ந்து விவாதித்தல் | 30 மணித்துளி |
| 13. | இணைய கருத்துருவாக்கம் (Digital content development) | 60 மணித்துளி |

**5.04** பள்ளி நிலையில் A தரத்தில் முதல் மதிப்பெண் பெற்ற ஒரு தனிநபர் அல்லது குழுவினர் – இனம் ஒன்றிற்கு ஒருவர் அல்லது ஓர் அணி எனக்கல்வி மாவட்ட அளவிலான போட்டியில் பங்குபெற தகுதி பெறுவர். இதே முறை (system) அடுத்தடுத்த நிலையிலான போட்டிகளுக்கும் உரித்தாகும்.

**5.05** ஒருவர் ஏதேனும் மூன்று தனிப்போட்டி மற்றும் இரண்டு குழுப்போட்டியில் மட்டுமே அதிகபட்சமாகப் பங்குபெறமுடியும்.

**5.06** ஒரு நபர் பல்வேறு போட்டிகளில் கலந்து கொள்கிற போது தகுதிபெற்ற ஒருவர் 'வெற்றி முதல்வன்' (Champion) என அறிவிக்கப்பட்டுப் பாராட்டப்படுவார்.

# இயல் – 6

## பள்ளியளவில் கலைத் திருவிழா நிகழ்ச்சிகளை நடத்துதல் சார்ந்த விதிமுறைகள்

**6.01** பள்ளி, கல்வி மாவட்ட, மாநில அளவிலான போட்டிகள், பள்ளிக் கல்வித்துறையின் அல்லது அரசின் ஆணைக்கிணங்க, கால அட்டவணைப்படி ஒவ்வோர் ஆண்டும் நடத்தப்படுதல் வேண்டும்

**6.02** கலைவிழா ஒரு பொதுநிகழ்ச்சியாக நடத்தப்பட வேண்டும். கலை விழா நிகழ்ச்சிகளை நடத்துவதற்கும், நிருவாகம் செய்வதற்கும் பள்ளியளவில் குழு ஒன்றினை அமைக்க வேண்டும். இக்குழுவில் ஆசிரியர், பெற்றோர், மாணவர், கலையார்வலர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள், பள்ளித் தலைமையாசிரியர் ஆகியோர் இடம் பெறுவர்.

**6.03** போட்டியில் பங்குபெறுவதற்குக் கட்டணம் இல்லை.

**6.04** போட்டிகளில் நடுவர்களாகப் பணிபுரிய, உரிய கலை பிரிவின் வல்லுநர்களைக் கண்டறிந்து பள்ளியின் தலைமை ஆசிரியர், விழா அமைப்புக் குழுவினரிடம் கலந்து ஆலோசித்து நடுவர் பட்டியல் ஒன்று தயார் செய்து அதன் முன்னனுமதியை மாவட்டக் கல்வி அலுவரிடமிருந்து பெற வேண்டும். இந்தப் பட்டியலில் இருந்துதான் நடுவர்கள் நியமிக்கப்படுதல் வேண்டும்.

**6.05** ஒவ்வொரு போட்டியிலும் A தரத்தில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவனை / குழுவினை மட்டுமே கல்வி மாவட்ட அளவிலான போட்டிகளுக்குப் பரிந்துரைக்க வேண்டும். இப்பரிந்துரை வழிகாட்டு நெறிமுறையின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு அமைய வேண்டும். மேலும் இதற்கான மென்படிவத்தில்தான் பரிந்துரைத்தல் வேண்டும்.

**6.06** ஏதேனும் ஒரு கலைப்பிரிவில் A தரம் பெற்ற தகுதியுடையவர்கள் யாரும் இல்லையெனில், அக்கலைப்பிரிவிலிருந்து அடுத்த நிலை போட்டியில் கலந்து கொள்ள யாரும் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

**6.07** பள்ளி அளவில் நடைபெறும் பள்ளிக் கலைத் திருவிழாவில் பெற்றோர் ஆசிரியர் சங்கம், உள்ளூர் சமூகப்பிரதிநிதிகள் ஆகியோரின் முழுமையான ஈடுபாட்டையும், ஒத்துழைப்பையும் பெறுதல் மிக மிக இன்றிமையாதது.

**6.08** தொடக்கநிலை வகுப்புகளான 1 முதல் 5 வரையிலான மாணவர்களுக்கு அடுத்த நிலை போட்டிகள் அந்தந்த ஒன்றிய அளவில் நடத்தப்பட வேண்டும். இதற்கான அமைப்பாளர் பொறுப்பினை உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் ஏற்க வேண்டும்.

**6.09** பள்ளி அளவிலான எல்லாப்போட்டிகளும் ஆகஸ்ட் மாத இறுதிக்குள் அல்லது பள்ளிக் கல்வித் துறையின் ஆணைக்கிணங்க நடத்தி முடிக்கப்பட வேண்டும்.

**6.10** ஒன்றிய அளவில் வகுப்பு 1 முதல் 5 வகுப்பு வரையில் பயிலும் மாணவர்கள் கலந்து கொள்ளும் போட்டி நிகழ்வுகளை உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் நடத்துவதற்குரிய செலவினத் தொகைக்காகத் தனியே நிதி வழங்கப்படும்.

# இயல் – 7

## கல்வி மாவட்ட அளவில் போட்டிகளை நடத்தும் வழிமுறைகள்

7.01: ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர் மாதத்திற்குள் அரசின் ஆணைக்கிணங்க அல்லது தமிழ்நாடு அரசுப் பள்ளிக்கல்வித் துறையின் ஆணைகளுக்குட்பட்டு, கல்வி மாவட்ட அளவில் தமிழகப் பள்ளிக்கலைத் திருவிழாப் போட்டிகள் நடத்தப்பட வேண்டும். அக்கல்வி மாவட்டத்தில் உள்ள ஏதேனும் ஒரு பள்ளியில் போட்டிகளை நடத்தலாம். இது ஒரு பொதுநிகழ்ச்சியாகவும் அதிக ஆரவாரம் இல்லாததாகவும் நடத்தப்பட வேண்டும்.

7.02 ஏதேனும் ஒரு கலைப்பிரிவில் ஒரே ஒரு போட்டியாளர் மட்டுமே இருந்தால்அவருக்கு A தரம் கிடைத்தால் அவர் அடுத்த நிலை போட்டிக்கு அனுப்பப்படுவார். மேலும், அந்தப் போட்டியாளரே உயர் மதிப்பெண் பெற்றவராகக்கருதப்பட்டுச் சான்றிதழ் வழங்கப்பெறுவார்.

7.03 கல்வி மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு தனியார் (Unaided Private) பள்ளியும் பள்ளியின் நிதியிலிருந்து, கீழ்வருமாறு நிதி ஒதுக்கித்தர வேண்டும்.

1. ஆயிரம் குழந்தைகளுக்கு குறைவாக உள்ள உயர்நிலைப்பள்ளி ரூ. 1,000/– மேல்நிலைப் பள்ளி ரூ. 1,500 /–
2. ஆயிரத்துக்கும் அதிகமாக குழந்தைகள் உள்ள உயர்நிலைப்பள்ளி ரூ. 1,500/– மேல்நிலைப்பள்ளி ரூ. 2,000/–
3. நடுநிலைப் பள்ளிகள் ரூ. 500/– வீதம்

7,04
1. இத்தொகையினை கல்வி மாவட்ட அமைப்புக் குழுவின் தலைவருக்குப் பள்ளிகள் வழங்க வேண்டும்.
2. மாணவர்களின் பயணம் மற்றும் உணவுச் செலவுகளை அந்தந்தப் பள்ளிகளே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

7.05 மாணவர்கள் எவரும் பதிவுக்கட்டணம் செலுத்த வேண்டியதில்லை.

7.06 விழாவினை நடத்துவதற்காக, கல்வி மாவட்டங்களுக்குத் தனியே நிதிவழங்கப்படும்

7.07: கல்வி மாவட்ட அளவிலான கலைத் திருவிழாப் போட்டி சார்ந்த அனைத்து வரவு செலவு கணக்குகளும் தனியாகப்பராமரிக்கப்பட்டு, முறையாகத்தணிக்கை செய்யப்பட்டு, தணிக்கை அறிக்கை கலைத்திருவிழாக் குழுவினரால் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

7,08 விழா ஏற்பாட்டிற்காகப் பெறப்பட்ட தொகையில் செலவு போக மீதம் இருந்தால் அத்தொகை தமிழகப் பள்ளிக் கலைத் திருவிழா குறித்த வங்கிக்கணக்கில் வைக்கப்பட்டு அடுத்த ஆண்டிற்குப்பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

7.09 கல்வி மாவட்ட அளவில், கலைவிழாவினை நடத்துவதற்குக் கீழே குறிப்பிட்டவாறு அமைப்புக் குழு ஒன்றனை அமைக்க வேண்டும்.

இக்குழுவில் இடம் பெறுவோர்:

- தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதி (எம்.எல்.ஏ, எம்.பி)
- பெற்றோர் ஆசிரியர் சங்கப்பிரதிநிதிகள்.
- உயர்நிலைப்பள்ளி மேனிநிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர் மற்றும் நடுநிலைப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்.
- கல்வி மாவட்ட, மாவட்டக் கல்வி அலுவலர் பரிந்துரை செய்யும் கலை வல்லுநர் மூன்று பேர்.
- மாவட்டக் கல்வி அலுவலர் இக்குழுவின் செயலராகச் (பதவி வழி) செயல்படுவார்.
- இக்குழுவின் உறுப்பினர்களின் எண்ணிக்கை தேவைக்கேற்ப அமையலாம்.

**இங்குக்கூறப்பட்டுள்ள அமைப்புக் குழுவின் கட்டமைப்பு பரிந்துரை மட்டுமே, இது முற்றிலும் முடிவானதன்று. குழுவின் கட்டமைப்பு அந்தந்த மாவட்டத்தின் வசதிகளுக்கு ஏற்ப அமைக்கப்படலாம்.**

7.10 எந்தப் பள்ளியில் போட்டி நடைபெறுகிறதோ அப்பள்ளியில் தலைமை ஆசிரியர் முதன்மை அமைப்பாளராகச்செயல்படுவார். மேலும், ஒரு தலைமையாசிரியர் உதவி அமைப்பாளராக செயல்படுவார்.

7.11 கல்வி மாவட்ட அளவிலான போட்டிகள் **மூன்று** நாளுக்குள் நடத்தி முடிக்கப்படவேண்டும். முடிந்தவரை நிகழ்ச்சிகள் யாவும் **பகல் நேரத்தில்** நடத்துவது ஏற்புடையதாகும்.

7.12 ஏற்கெனவே தயார் செய்யப்பட்டுள்ள நடுவர்களின் பட்டியலில் இருந்து நடுவர்களைத் தேர்வு செய்யும் அதிகாரம் கல்வி மாவட்ட அலுவலருக்கு உண்டு.

7.13 ஒரு கலை இனத்தின் அனைத்து நிகழ்ச்சிகளையும் அதே நடுவர்கள் தான் மதிப்பீடு செய்ய வேண்டும். அதாவது ஒயிலாட்டம் என்கிற கலை இனத்தின் நடுவராக இருப்பவர்களே தொடர்ந்து அடுத்தடுத்த நாள்களிலும் அக்கலை இனத்திற்கு நடுவர்களாக இருப்பர்.

7.14 மாணவர்களை அழைத்துச் செல்லுதல், கண்காணித்தல் முதலான செயல்கள் அனைத்தும் பள்ளித் தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்களின் பொறுப்பு ஆகும். குறிப்பாக மாணவிகளைக்கண்காணிக்க பொறுப்பான ஆசிரியை உடன் செல்வோர் குழுவில் இடம்பெறுதல் அவசியம்.

7.15 கல்வி மாவட்ட அளவில் கலந்து கொண்டு **A தரம்** பெற்று வென்றவர்கள், கீழ்க்காணும் விதிமுறைக்குட்பட்டு மாவட்ட அளவிலான போட்டிகளுக்கு அனுப்பப்படுவார்கள்.

- அடுத்த நிலையிலான போட்டிகளில் கலந்துகொள்ள தனிநபர் போட்டியென்றால் ஒரு கலை வடிவத்திற்கு ஒருவர் மட்டுமே தேர்வு செய்யப்பட்டுப்போட்டிக்கு அனுப்பப்படுவார்.
- பேண்டு வாத்தியம், தேசபக்தி பாடல்கள் தெருக்கூத்து முதாலன கலை இனக்குழுக்களில் ஒரு கல்வி மாவட்டத்திற்கு ஒரு குழு / அணி மட்டும் அடுத்த கட்டப் போட்டிக்கு அனுப்பப்பட வேண்டும். அதாவது தனிப்போட்டியாக இருந்தால் ஒரு மாணவி அல்லது ஒரு மாணவர், குழுப்போட்டியாக இருந்தால் ஓர் அணி மட்டுமே மாவட்ட அளவிலான போட்டிக்கு அனுப்பப்படுதல் வேண்டும்

7.16 நெறிமுறை வழிகாட்டியில் கொடுக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு முறை மற்றும் அதன் கணக்கீடு ஆகியவற்றிக்கு ஏற்ப வெளிப்பாடுகள் (Performances) மதிப்பிடப்பட்டு இறுதி முடிவு எடுக்கப்படுதல் வேண்டும்.

7.17 கல்வி மாவட்ட அளவில் வென்ற ஒருவரை/குழுவை மாவட்ட அளவில் நடைபெறும் போட்டிக்கு அனுப்பும்பொழுது கல்வி மாவட்ட அளவிலான முழு அறிக்கை மற்றும் நிகழ்ச்சிகளின் குறுந்தகடு பதிவு ஆகியவற்றை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்திற்கும் அனுப்புதல் வேண்டும். வெற்றி பெற்ற ஒருவர்/குழு அணிபற்றிய முழுமையான விவரங்களை மாவட்ட அளவிலான போட்டி அமைப்பாளர்களுக்கு உடனடியாக அனுப்புதல் வேண்டும்.

7.18 (a) நடுவர்களின் மதிப்பீட்டுப் பட்டியலில் அடித்தல், திருத்துதல், வெள்ளை மை வைத்து அழித்தல் ஆகியன முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும். தவிர்க்க முடியாத நிலையில் திருத்தங்களுக்கு நடுவரின் முழுக் கையெழுத்து இடம்பெற வேண்டும்.

(b) நடுவர்கள் தயாரித்த மதிப்பீட்டுப்பட்டியல் மற்றும் வென்றவர்களின் பட்டியல் யாவும் மூன்று மாதக்காலத்திற்குக் கவனமாகப் பாதுகாக்கப்பட வேண்டும். மேற்கண்ட மதிப்பீட்டுப்பட்டியல் மேல் முறையீட்டுக்குழுவின் தலைவர் அல்லது மாநிலக்கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநர் கேட்கும்போது வழங்கப்பட வேண்டும்.

7.19 கல்வி மாவட்ட அளவில் **A தரம்** பெற்ற எல்லாப்போட்டியாளர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட வேண்டும்.

7.20 போட்டியின் முடிவுகளை அப்போட்டிகளின் நடுவர்களே அறிவிக்க வேண்டும். முடிவுகளை வேறு யாரும் அறிவிக்கக் கூடாது.

7.21 போட்டிகளை நடத்துவதற்கு ஆசிரியர்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளலாம். பல்வேறு குழுக்களில் இடம்பெற்ற ஆசிரியர்களைத்தவிர, பிறர் யாரும் விழா நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது.

7.22 பணியில் அமர்த்தப்பட்ட ஆசிரியர்களுக்கான வருகைப் பதிவுச்சான்றிதழ் தலைமை அமைப்பாளரால் மட்டுமே வழங்கப்பட வேண்டும்.

# இயல் – 8

## மாவட்ட அளவிலான கலைவிழாப்போட்டியின் விதிமுறைகள்

**8.1** மாவட்ட அளவிலான போட்டிகள் அக்டோபர் இரண்டாம் வாரத்திற்கு முன்பாக அல்லது பள்ளிக் கல்வித் துறையின் ஆணைக்கிணங்க நடத்தி முடிக்கப்பட வேண்டும். இப்போட்டிகளை அந்த மாவட்டத்தில் உள்ள ஏதேனும் ஒரு பள்ளியில் நடத்திக் கொள்ளலாம்.

**8.2** கல்வி மாவட்ட அளவில் பரிந்துரைக்கப்பட்ட ஒருவர்/குழு அணி மட்டுமே மாவட்ட அளவில் கலந்து கொள்ள முடியும். போட்டியாளர்கள் அல்லது குழு ஒன்று மட்டுமே என்னும் நிலையில் கூட மதிப்பெண் போட்டியாளருக்கு வழங்கப்பட வேண்டும். மேலும் போட்டியாளரை மதிப்பீடு செய்து, தரச் சான்றிதழ் மற்றும் பரிசு வழங்க வேண்டும். போதுமான தகுதி மதிப்பெண் இருந்தால்மட்டுமே அப்போட்டியாளரை மாநில அளவிலான போட்டிக்குத்தகுதியானவராகப் பரிந்துரைக்க வேண்டும்.

**8.3** மாவட்ட அளவிலான **‘விழா அமைப்புக்குழு’** கீழ்வருமாறு அமைக்கப்படலாம். **இது பரிந்துரை மட்டுமே, மாவட்டத்தின் தேவைக்கேற்ப இக்குழுவின் கட்டமைப்பு மாறுபட்டும் அமையலாம்.**

**புரவலர்கள் :**

அம்மாவட்டத்தின் அமைச்சர், எம்.எல்.ஏ, எம்.பி., மாவட்ட பஞ்சாயத்து மாமன்றத் தலைவர் / மாவட்ட ஆட்சியாளர் / மாவட்டக்காவல் கண்காணிப்பாளர்.

**தலைவர் :**

மாவட்டப்பஞ்சாயத்து மாமன்றத் தலைவர் / மாநகரத் தந்தை / நகர மன்றத்தலைவர் (எவரேனும் ஒருவர்)

**துணைத்தலைவர் :**

மாவட்டப்பஞ்சாயத்து / மாநகரத் தந்தை / நகர்மன்றத் தலைவர் / கல்வி நிலைக்குழுத் தலைவர் (எவரேனும் ஒருவர்)

**பொது அமைப்பாளர் :**

மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்

**துணை அமைப்பாளர் :**

மாவட்டக் கல்வி அலுவலர் / நடத்தப்படும் பள்ளியின் முதல்வர் / DIET முதல்வர் (எவரேனும் இருவர்)

**பொருளாளர்**

உதவி மாவட்டத் திட்ட ஒருங்கிணைப்பாளர்

**உறுப்பினர்கள்**

1. பல்வேறு கிளை குழுக்களின் அமைப்பாளர்கள் .
2. அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர் பிரதி நிதிகள்.
3. உதவிக் கல்வி அலுவர்கள்
4. போட்டி நடைபெறும் பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தலைவர் .

குறிப்பு : கிளைக் குழுக்களின் தலைவர்களாக அந்தப்பகுதியின் எம்.எல்.ஏ/எம்.பி மற்றும் தேர்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்துத்தலைவர்கள் இருக்கலாம்.

**8.05** மாவட்ட அளவிலான போட்டிகளை **<u>மூன்று</u>** நாளுக்குள் நடத்தி முடிக்க வேண்டும்.

**8.06** ஒன்றியம், கல்வி மாவட்டம் மற்றும் மாவட்டங்களுக்கு மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மூலம் நிதி வழங்கப் பரிந்துரைக்கப்படுகிறது. மாவட்ட முதன்மைக் கல்வி அலுவரால் நியமிக்கப்படும் கணக்காளர்களால் வரவுசெலவு கணக்கு ஒரு மாதத்திற்குள் முடிக்கப்பட்டு அக்கணக்கானது விழா குழுவால் ஒப்புதல் வழங்கப்பட வேண்டும். மேலும் இந்த வரவு செலவு கணக்கு முறைப்படி தணிக்கை செய்யப்பட வேண்டும். மீதித் தொகை இருப்பின், பள்ளி கலைவிழா வங்கிக்கணக்கில் இருப்பு வைக்கப்பட்டு அடுத்த ஆண்டின் செலவினத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

**8.07** தகுதி வாய்ந்த நடுவர்களை அங்கீகரிக்கப்பட்ட நடுவர்களின் பட்டியலில் இருந்து அமைப்புக் குழுவின் ஒப்புதலோடு நியமிக்க வேண்டும்.

**8.08** நடுவர்களின் பட்டியல் ரகசியமாக வைக்கப்படவேண்டும். ஒரு கலை இனத்தின் (item) நடுவர்கள் தான் அக்கலை இனத்தின் அனைத்து நிகழ்ச்சிகளையும் மதிப்பிட வேண்டும். போட்டி தொடங்குவதற்கு முன்பு நடுவர் பற்றிய விவரம், அவரது தகுதி. பெற்ற விருதுகள், பெருமைகள் பற்றிய அறிமுகம் மேடையில் அறிவிக்கப்பட வேண்டும்.

**8.9** போட்டி தொடங்குவதற்கு முன்பே, நடுவர்களுக்கு மதீப்பீடு செய்தல் பற்றிய முழுவிவரம் மற்றும் ஒவ்வொரு நிலைக்குமான மதிப்பீட்டு முக்கியத்துவம் (Weightage) பற்றிய விவரங்கள் தரப்பட வேண்டும்.

நெறிமுறை வழிகாட்டியில் கூறப்பட்டுள்ள மதிப்பீட்டு விதிமுறைகளுக்கு உட்பட்டும், நிகழ்ச்சி படைப்பாளிகளின் தனித்திறன்களை,செயல்பாடுகளை அம்சங்களை, இயக்கங்களை, மிகுந்த கவனத்துடன் மதிப்பிட்டும் மதிப்பெண்கள் வழங்கப்பட வேண்டும்.

**8.10** மதிப்பீட்டுத் தாளில் திருத்தம் / அடித்தல் கூடாது தேவைப்படுமேயானால், திருத்தங்கள் உரிய முறையில் நடுவர்களின் முழுக் கையொப்பத்துடன் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

**8.11** போட்டி முடிந்த உடனேயே அதே மேடையில் நடுவர்கள் கால தாமதமின்றி போட்டி முடிவுகளை அறிவிக்க வேண்டும். வெற்றி பெற்ற குழு/ஒருவர் குறியீட்டு எண், வழங்கப்பட்ட கிரேடு, மதிப்பெண் யாவும் அறிவிக்கப்படவேண்டும்.

**8.12** மதிப்பீட்டுத் தாள்கள், முடிவுகள் யாவும் முறையாக உறையிலிடப்பட்டு சீல் செய்யப்பட்டு முதன்மைக்கல்வி அலுவலரின் அலுவலகத்தில் வைக்கப்பட வேண்டும்.

**8.13** மாவட்ட அளவில் பங்கு கொண்டு A தரம் கிடைக்கப் பெற்ற அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்பட வேண்டும்.

**8.14** மாவட்ட அளவிலான போட்டி முடிந்தவுடனே இது பற்றிய அறிக்கை மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

**8.15** ஒரு கலை இனத்திற்கு மாவட்ட அளவில் A தரம் பெற்று, முதல் மதிப்பெண் பெற்ற ஒரு நபர் அல்லது ஓர் அணி என்கிற கணக்கில்தான் மாநில அளவிலான போட்டியில் பங்கு கொள்ள முடியும்.

# இயல் – 9

## மாநில அளவில் பள்ளிக் கலைத் திருவிழாவினை நடத்துவது சார்ந்த விதி முறைகள்

**9.01** ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் திங்கள் கடைசி வாரத்திற்குள் அல்லது பள்ளிக் கல்வித் துறையின் ஆணைக்கிணங்க போட்டிகளை நடத்தி முடிக்க வேண்டும்.

**9.02** வழிகாட்டு நெறிமுறைகளுக்கு உட்பட்டு மாவட்ட அளவில் A தரத்தில் (Grade) முதல் மதிப்பெண் பெற்ற மாணவர் / அணி மட்டுமே மாநில அளவிலான போட்டிகளில் பங்கு கொள்ள முடியும்.

**9.03** மாநில அளவில் அமைப்பாளர் குழு ஒன்று (**Organizing Committee**) அமைக்கப்பட வேண்டும். இக்குழுவின் கட்டமைப்பு கீழ்வருமாறு அமையலாம்.

**அமைப்புக்குழு (Organizing committee)**

முதன்மைப் புரவலர்கள்

- ✓ மாண்புமிகு முதலமைச்சர்
- ✓ மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்
- ✓ மாண்புமிகு கல்வி அமைச்சர்
- ✓ மாண்புமிகு போட்டி நடைபெறும் மாவட்டத்தைச் சார்ந்த அமைச்சர்

**புரவலர்கள்**

சார்ந்த மாவட்ட எம்.எல்.ஏ., எம்.பி., மாவட்ட ஆட்சியாளர், மாவட்டக்காவல் கண்காணிப்பாளர்.

**தலைவர் (Chairman)**

மாண்புமிகு பள்ளிக் கல்வி அமைச்சர்

**துணைத் தலைவர்**

சார்ந்த மாவட்டத்தில் இயங்கும் உயர்நிலைக் கல்வி நிறுவனத்தின் தாளாளர் / தலைவர்

**பொது ஒருங்கிணைப்பாளர்கள் (General Coordinator)**

1. பள்ளிக் கல்வி இயக்குநர்
2. தொடக்கக் கல்வி இயக்குநர்

**இணை ஒருங்கிணைப்பாளர்**

மேல்நிலைக் கல்வி இணை இயக்குநர் (Hr.sec)

உயர்நிலைக் கல்வி இணை இயக்குநர் (S.S)

தொடக்கக் கல்வி இணை இயக்குநர்

**பொது அமைப்பாளர் (General Convener)**

இயக்குநர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT)

**இணை பொது அமைப்பாளர்**

சார்ந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்

மாவட்டக் கல்வி அலுவலர்

முதல்வர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்

**பொருளாளர்:** சார்ந்த மாவட்ட முதன்மைக் கணக்காளர்.

**உறுப்பினர்கள் (Members)**

1. எல்லா கிளைக்குழுக்களின் தலைவர்கள் மற்றும் அமைப்பாளர்கள்
2. பிற துறைத் தலைவர்கள் (Directors of Different Departments)
3. போட்டி நடைபெறும் பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர்
4. தேர்ந்தெடுக்கப்பட்ட P.R.I. Member

**பள்ளிக் கல்வித் துறையின் அவ்வப்போதைய ஆணைக்கிணங்க அமைப்புக்குழு, கட்டமைப்பு ஆகியவை மாற்றப்படலாம்.**

9.04 மாநில அளவிலான போட்டிகளின் அனைத்துப் பொறுப்புகளும் அமைப்புக் குழுவைச் சார்ந்ததாகும். மாநிலப்போட்டிகள் சார்ந்த நிதிப் பொறுப்பும் இவ்வமைப்பையே சாரும். போட்டி நிறைவுற்ற பிறகு வரவுசெலவு கணக்கின் அறிக்கையையும், தணிக்கை அறிக்கையையும் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்திற்கு ஒரு மாதத்திற்குள் அனுப்பி வைக்க வேண்டும். கிளைக் குழுக்களின் செயற்பாடுகளைக் கண்காணித்தல் மற்றும் செயல்படத் தூண்டுதல் வழிகாட்டுதல் யாவும் அமைப்புக்குழுவின் கடமையாகும்.

9.05 உட்குழுக்களைக்கீழ்வருமாறு அமைத்தல் வேண்டும். எல்லா உட்குழுக்களுக்கும் தலைவர் மக்கள் பிரதிநிதிகளாகவும், அமைப்பாளர்கள் தலைமையாசிரியர்கள், ஆசிரியர்களாக இருக்க வேண்டும் (இவை யாவும் பரிந்துரை மட்டுமே – இறுதியானது அல்ல).

1. **Reception committee** :
   **பொறுப்புகள்:** செயலாக்கக்குழுவின் தலைவருடன் கலந்து பேசி தொடக்க விழா, நிறைவுவிழா மற்றும் பல்வேறு நிகழ்ச்சிகளை வடிவமைத்தல்
2. **Food committee**:
   **பொறுப்புகள்:** அனைவருக்கும் – உணவு வழங்குவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் கவனித்தல்.
3. **Publicity committee**:
   **பொறுப்புகள்:** ஊடகத் தொடர்பு, போட்டி முடிவுகள் வெளியீடு – புகைப்படங்கள் அன்றாட ஊடக நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்தல்.

**4. Programme Committee:**

**பொறுப்புகள்**

1. புகார் எதுவும் எழா வண்ணம் எல்லா போட்டிகளையும் முறைப்படி நடத்துதல்
2. மாவட்டங்களில் இருந்து பெறப்படும் பதிவுகளைச் சரிபார்த்து மாநில போட்டிக்கான படிவங்களை இறுதி செய்தல்.
3. ஆண், பெண், தனிப்போட்டி, குழுப் போட்டிக்கான – பட்டியலை ஒவ்வோர் இனத்திற்கும் தனித்தனியே தயாரித்தல்
4. ஒவ்வோர் இனத்திற்கும் (Item) – மதீப்பீட்டுப்பட்டியல், இறுதி முடிவு அறிக்கை தயார்செய்தல். (Judgment sheet and Result sheet)
5. போட்டிகளுக்கான நாள், நேரம் குறித்த பட்டியல் (Programme Schedule) தயார்செய்தல்.
6. போட்டியாளர்களுக்கான அறிவுரைகள் அடங்கிய குறிப்புத்தாள் தயாரித்தல்
7. போட்டியாளர்களுக்கான அடையாள எண் பட்டைகள் தயார் செய்தல்.
8. அரங்க மேற்பார்வை, நிகழ்ச்சி அமைப்பு – இவற்றிற்கு ஆசிரியர்களை நியமித்தல்
9. அரங்க – அறிவிப்பாளர் (நிகழ்ச்சிப் படைப்பாளர்) நியமன ஏற்பாடுகளைச் செய்தல்
   - மதிப்பீட்டுப் பட்டியல், நேரக்காப்பாளர் ஏற்பாடு செய்தல்
   - போட்டியாளர்களைத் தயார் நிலையில் வைத்தல்
   - நடுவர்களுக்கான இருக்கை, தேநீர், உணவு ஆகியவற்றைக் கவனித்தல்
   - போட்டியில் தகுதி பெற்றவர்கள் பட்டியலைத் தயார் செய்தல்
   - அந்தந்த நாட்களுக்கான நிகழ்வுகளின் முடிவுகளை அன்றே தயார் செய்து அறிவித்தல் மற்றும் பாதுகாத்தல்
   - ஒரு போட்டியாளர் – பல்வேறு போட்டிகளில் பங்கு பெறுவதாக இருந்தால் அதற்கேற்றாற்போல நேர மாற்றம் செய்து கொடுத்தல்

**5. Discipline Committee**

பொறுப்புகள்: அமைதி – ஒழுக்கம் – கண்காணித்தல் – NCC, NSS SCOUT and GUIDE மாணவர்களை ஒருங்கிணைத்து ச்செயல்படுதல்

**6. Welfare committee**

**பொறுப்புகள்:** விருந்தினர்களுக்கு வசதிகள் செய்து தருதல், மருத்துவ வசதி – முதலுதவி – ஏற்பாடுசெய்தல், தங்குமிடம், உணவு வழங்குமிடம் ஆகிய இடங்களில் தூய்மைப்பராமரிப்பு ஆகியன.

**7. பதிவுக் குழு (Registration committee)**

**பொறுப்புகள்:** பல்வேறு மாவட்டங்களிலிருந்து கலந்து கொள்ளும் வரும் போட்டியாளர் விவரங்களைப் பதிவு செய்தல். பதிவுப்பட்டியலின் நகலினை, தங்குமிடம், உணவு ஏற்பாட்டாளருக்கு வழங்குதல். உணவு வகைகளை அந்தந்த நேரத்திற்குப் போட்டியாளர் குழுக்களுக்கு வழங்குதல் ஆகியன

**8. Accommondation Committee:**
**பொறுப்புகள்:**

- பதிவுக் குழுவுடன் இணைந்து செயல்பட வேண்டும்
- அனைவருக்கும் தங்குவதற்கான இடம், குடிநீர், மின்சாரம், தூய்மை, கழிப்பறை ஆகியன குறித்த ஏற்பாடுகள்.
- சிறப்பு விருந்தினர் நடுவர்களுக்கான தங்குமிட வசதிகளை ஏற்பாடு செய்தல்

**9. Transport committee:**

**பொறுப்புகள்:**– நடுவர்கள் அலுவலர்கள் மற்றும் போட்டியாளர்களுக்குப் போக்குவரத்து வசதிகள் செய்து தருதல்

**10. Trophy committee:**

சுழல் கேடயங்களைத் திரும்பப் பெறுதல் – புது கேடயங்கள், பரிசுப் பொருட்களை வாங்கி, முறைப்படுத்தி வைத்தல்

**11. Stage and Pandal Decoration committee** :

**பொறுப்புகள்:** ஒப்பனை அறைகள் – உணவு தயாரிக்கும் இடம் – ஏற்பாடு – செய்தல், தீயணைப்புத்துறையின் உதவியை நாடுதல். P.W.D துறையில் இருந்து அரங்கப்பாதுகாப்புப் பற்றி ச்சான்றிதழ் பெறுதல். Telephone, furniture, Banner ஆகியவற்றிற்கான ஏற்பாடுகள் முதலியன.

**12. Light and Sound committee: (ஒளி, ஒலி)**

**பொறுப்புகள்:** ஒளி விளக்குகள், அலங்கார விளக்குகள், மின் விசிறிகள், Emergency light and Generator ஆகியன ஏற்பாடு செய்தல்.

**13. மலர் வெளியீட்டுக் குழு (Souvenir committee)**

**பொறுப்புகள்:** கட்டுரை, துணுக்குகள், விளம்பரங்கள் பெறுதல் இறுதி நாளன்று மலர் வெளியிட ஏற்பாடு செய்தல் . அனைத்து மாவட்டங்களுக்கும் மலர் வழங்க ஏற்பாடு செய்தல்.

**14. நிதிக்குழு (Finance committee)**

**குழு அமைப்பின் வடிவம்:**

1. General convener – பொது அமைப்பாளர்
2. Treasures (General Committee) – பொருளாளர் சார்ந்த மாவட்ட முதன்மைக் கணக்காளர்
3. Concerned A/C officer of DIET

ஆகியோர் இக்குழுவில் இடம்பெறுவர்.

**பொறுப்புகள்:** நிதி பெறுதல், பதிவேடுகள் பராமரித்தல், தணிக்கைக்கு ஏற்பாடு செய்தல், பல்வேறு உட்குழுக்களின் நிதிவேண்டுதலை ஆராய்ந்து நிதி வழங்குதல், பல்வேறு உட்குழுக்கள் கொடுக்கும் செலவினக் கணக்குகளைச் சரிபார்த்தல் ஆகியன.

**15. கலாச்சர அணி வகுப்புக் குழு (Parade committee)**

**பொறுப்புகள்:** தொடக்க விழாவின்போது பல்வேறு கலாச்சார நிகழ்வுகள், படைப்புகள், ரதங்கள் (Floats / Tableauax), விளையாட்டுகளின் அணி வகுப்பிற்கு ஏற்பாடு செய்தல்.

# இயல் – 10

## மேல்முறையீட்டு மன்றம்

**10.01** போட்டியின் முடிவுகள்பற்றி, மேல்முறையீடு செய்வதற்கான மேல்முறையீட்டு மன்றம் அமைக்கப்பட வேண்டும்.

மேல்முறையீட்டு மன்றம் – ஒரு கலை வடிவத்தின் நுட்பம், அது சார்ந்த சிறப்புக்கூறுகளைக் கருத்திற் கொண்டே இறுதி முடிவு எடுக்க வேண்டும்.

மறுமதிப்பீடு – மறு மேடையேற்றம் போன்ற செயல்கள் அனுமதிக்கப்படமாட்டா.

பரிந்துரைக்கப்பட்ட விண்ணப்பத்தில்தான் மேல்முறையீடு செய்தல் வேண்டும். மேலும் இறுதி தீர்ப்பும் அதற்குரிய படிவத்தில் மட்டுமே தெரிவிக்கப்பட வேண்டும்.

**10.02** பள்ளி, கல்வி மாவட்டம் மற்றும் மாவட்ட அளவில் மேல்முறையீட்டிற்கான கட்டணம்

ரூ. 500/– ஆகும். முறையீடு செய்தவருக்குச் சாதகமாக தீர்ப்பளிக்கப்பட்டால் இத்தொகை திருப்பித் தரப்படும். இல்லையெனில், இத்தொகை திருப்பித் தரப்பட மாட்டா.

**10.03** மேல்முறையீட்டுக் குழுவின் முடிவே இறுதியானது. மேல்முறையீடு செய்த ஒரு/ குழு மேல்முறையீட்டாளர் குழுவின் பரிந்துரை அல்லாமல் அடுத்த கட்ட போட்டியில் கலந்து கொள்ள முடியாது.

**10.04** ஒழுங்கீனமாக நடந்து கொள்ளும் போட்டியாளர்களைக் கையாள்வதற்காக ஐந்து பேர் கொண்ட ஒழுக்கக் குழு அமைக்கப்பட வேண்டும். அதில் மகளிர் ஒருவரும் இடம்பெற வேண்டும்.

**10.05 பள்ளிகளுக்கான மேல்முறையீட்டு மன்றம்:** மாவட்டக் கல்வி அலுவலரின் தலைமையின்கீழ், கலை வல்லுநர்கள் இருவர் மற்றும் இரு கல்வித் துறை அலுவலர்கள் அடங்கிய ஐந்து பேர் கொண்ட பள்ளிகளுக்கான மேல்முறையீட்டு மன்றம் அமைக்கப்பட வேண்டும். ஒரு கல்வி மாவட்டத்திற்கு ஒரு மேல்முறையீட்டு மன்றம் அமைக்கப்பட்டு, பள்ளிகளில் இருந்து பெறப்படும் மேல்முறையீடுகளை ஆய்வு செய்யும் பணியினை இம்மன்றம் மேற்கொள்ள வேண்டும்.

- பள்ளியில் போட்டி நடந்து முடிந்த ஒரு மணி நேரத்திற்குள்ளாக ரூ 500 கட்டணம் செலுத்தி மேல் முறையீடு அந்தந்த பள்ளியிலேயே செய்தல் வேண்டும்.

- இதற்கான படிவத்தில்தான் மேல் முறையீடு செய்யப்படல் வேண்டும்
- மேல்முறையீடு மன்றம் 5 நாளுக்குள்ளாக அல்லது கல்வி மாவட்ட அளவிலான போட்டிக்கு முன்பாக மேல் முறையீட்டை விசாரித்துத்தீர்ப்பு வழங்கிட வேண்டும்.

முறையீட்டின் தீர்ப்பு – போட்டியாளருக்குச்சாதகமாக இருந்தால் அவர் கட்டிய தொகை திருப்பித் தரப்பட வேண்டும்.

**10.06 கல்வி மாவட்டங்களுக்கான முறையீட்டு மன்றம் :** கல்வி மாவட்ட நிலைக்கான மேல்முறையீட்டுக் குழு ஒன்றனை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அமைக்க வேண்டும்

முதன்மைக் கல்வி அலுவலரின் தலைமையில், இரு கல்வித்துறை அலுவலர்கள் மற்றும் இரு கலைத்துறை வல்லுநர்கள் கொண்ட ஐவர் குழு – அமைக்கப்பட வேண்டும்

மேல் முறையீட்டு விதிமுறைகள் யாவும் பள்ளி நிலைப் போட்டிக்கான மேல் முறையீட்டு மன்றத்திற்குக் குறிப்பிடப்பட்டதனைப் போலவே அமையும்.

**10.07** மாவட்டங்களுக்கான முறையீட்டு மன்றம் : மாவட்ட நிலையிலான போட்டிகளுக்கான மேல்முறையீட்டு மன்றம் மாவட்ட ஆட்சித் தலைவர் / முதன்மைக் கல்வி மாவட்ட அலுவலர் தலைமையின்கீழ் – கல்வி அதிகாரிகள் 2 பேர் மற்றும் கலைப்பிரிவுகளின் வல்லுநர்கள் 6 பேர் என 9 பேர் கொண்ட அமைப்பாக உருவாக்க வேண்டும்.

**கலை** வல்லுநர்கள் அறுவரும் **கீழ்வரும் பிரிவுகளைச் சார்ந்தவராக இருக்க வேண்டும்.**

1. செவ்வியல் நடனக்கலை வல்லுநர்
2. செவ்வியல் இசை மெல்லிசை வல்லுநர்
3. தந்தி இசைக் கருவிகளின் வல்லுநர்
4. நுண்கலை வல்லுநர்
5. நாட்டுப்புறக்கலைஞர்
6. தாள இசைக்கருவிகளின் வல்லுநர்.

இம்மன்றம், ஓராண்டு அல்லது அடுத்த மாநில அளவிலான போட்டி தொடங்கப்படும் நாள்வரை நிலை பெற்றிருக்கும். இதனுடைய நியமனம் கல்வித்துறை துணை இயக்குநரால் அமைக்கப்பட்டு அறிவிக்கப்படவேண்டும்

**10.08** (a) மாவட்ட அளவில் போட்டியிட்டு, மேல் முறையீட்டு மன்றத்தின் மூலம் நியாயம் பெற்று மாநில அளவில் ஒருவர்/ஓர் அணி மாநில அளவில் கலந்து கொள்ள நுழைவுக் கட்டணமாக ரூ. 5,000/– செலுத்த வேண்டும்.

**10.08** (b) இப்போட்டியாளர் மாநில அளவிலான போட்டியில் மாவட்ட அளவில் பெற்ற உயர் மதிப்பெண்ணை விட அதிக மதிப்பெண் பெற்றால்தான் சான்றிதழ் பெறுவதற்கும், செலுத்திய பணத்தைத் திரும்பப் பெறுவதற்கும் தகுதி பெறுவார்.

மேல் முறையீட்டுமன்ற உறுப்பினர் அனைவரின் தற்சார் தகவல்கள் (Bio - Data) தயாரிக்கப்பட்டு மன்றத் தலைவரின் பொறுப்பில் வைக்கப்பட வேண்டும்

மேல் முறையீட்டு மன்ற உறுப்பினர்கள் யாவரும் தமது பிள்ளை / உறவினர்/ மாணவர் என எவரும் இப்போட்டிகளில் கலந்து கொள்ளவில்லை என்கிற உறுதிமொழி அளிக்க வேண்டும்

மேல்முறையீட்டு மன்றம் கலை வடிவத்தின் இலக்கணக் கூறுகள், நெறிமுறை வழிகாட்டி மற்றும் விதிமுறைகளை மட்டுமே கருத்திற் கொண்டு முறையீட்டைத்தற்சார்பின்றி ஆராய்ந்து தீர்வு காண வேண்டும்.

மற்ற விதிமுறைகள் – ஏற்கெனவே பள்ளி நிலை மேல்முறையீட்டு மன்றத்திற்குக் கூறியவாறு அமையும்.

மேல்முறையீடு சார்ந்த தாள்கள் யாவும் கோப்பில் பாதுகாப்பாக வைக்கப் பெறுதல் வேண்டும்

**10.09 மாநில அளவிலான மேல் முறையீட்டு மன்றம்:**

மாநில அளவிலான போட்டிக்கான முறையீட்டு மன்றம் கல்வித்துறை இயக்குநர் தலைமையின்கீழ் அமையும். கல்வித்துறை இணை இயக்குநர்கள் இருவர், கலை வல்லுநர்கள் 8 பேர் என மொத்தம் 11 பேர் அடங்கிய அமைப்பாகும். இம்மன்றத்தில் எட்டுக்கலை வல்லுநர்கள் கீழ்வரும் நிலைகளில் அமைவர்.

1. செவ்வியல் நடனக் கலை வல்லுநர்
2. செவ்வியல் மற்றும் மெல்லிசை வல்லுநர்
3. கிராமியக் கலைகளின் வல்லுநர்
4. இசைக் கருவிகளின் வல்லுநர்
5. ஓவியக் கலையின் வல்லுநர்
6. தாள இசைக்கருவிகளின் வல்லுநர்

7. மொழித்திறனாளர்

8. நாடகக் கலை வல்லுநர்

இவர்கள் தவிர, தேவைப்படின் வேறு வல்லுநர்களைக் கூடுதலாக நியமித்துக் கொள்ள மன்றத் தலைவருக்கு அதிகாரம் உண்டு.

10.10 மாநில அளவில் மேல் முறையீட்டுக் கட்டணம் ரூ. 1,000/– ஆகும்.

10.11 மேல்முறையீட்டு மன்றம் சார்ந்த ஏற்கெனவே கூறப்பட்ட விதிமுறை, நெறிமுறைகள் மாநில அளவிலான மன்றத்திற்கும் பொருந்தும்.

10.12 மாநில மேல்முறையீட்டு மன்றத்தின் முடிவே இறுதியானது.

## இயல் – 11

## தமிழகப் பள்ளிக் கலைத் திருவிழா – சார்ந்த பொதுவான விதிமுறைகள்

1. எழுதுதல் சார்ந்த போட்டிக்குத் தாள்கள் மட்டுமே வழுங்கப்படும் பிற பொருள்கள் யாவற்றையும் போட்டியாளர் கொண்டு வர வேண்டும்.
2. போட்டிகளுக்கான தலைப்புகளை நடுவர்களே தீர்மானிப்பர்.
3. செவ்வியல் இசைக்கு (Karnatic music) சுதிப்பெட்டி பயன்படுத்திக் கொள்ளலாம். மேலும் போட்டியாளர்கள் தமக்குப் பிடித்த ராகத்தில் பாட அனுமதியுண்டு.
4. கிராமிய நடனங்களில் – அதற்கேற்ற கிராமியத் தன்மை சார்ந்த உடைகளையே அணிதல் வேண்டும், மிகை ஒப்பனையான அலங்கார ஆடைகளை அணிதல் கூடாது.
5. கிராமிய நடனம் / பரதநாட்டியம் / குச்சுப்புடி / மோகினி ஆட்டம் / குழு நடனம் / ஒயிலாட்டம் / தேவராட்டம் ஆகியவற்றில் பதிவு செய்யப்பட்ட இசை / பாடல்களைப் (CD/Cassette) பயன்படுத்திக் கொள்ளலாம்.
6. பேச்சுப் போட்டிக்கான தலைப்பு – 5 மணித்துளி முன்பாகத்தான் குலுக்குச்சீட்டு எடுப்பது மூலம் அறிவிக்கப்படும்.
7. பின்புலப் பங்கேற்பாளர் / பின்னிசை இசைப்போர் யாவரும் அந்தந்த வகைக்கான வயதுடையவர்களாகவே இருக்க வேண்டும்.
8. மத்தளம் வாசிக்கும் போட்டிக்கு இரு துணைக் கலைஞரை வைத்துக் கொள்ளலாம்.
9. இசைக் குழுவின் கருவிகளை இசைப்போரும் போட்டியாளர் எண்ணிக்கையில் அடங்குவர். இசைக் கருவிகளை வல்லுநர்கள் ஆய்வு செய்த பின்னரே அவற்றை இசைக்க அனுமதியளிப்பர்.
10. பாரம்பரிய கலை வடிவங்களைப் படைக்கும்போது பாரம்பரியத்தை மீறிய – நவீன ஒப்பனை, நவீன துணைக் கருவிகளைப் பயன்படுத்த அனுமதி இல்லை.
11. கோலாட்டம், கும்மியாட்டம் போன்ற கலை இனங்களுக்கு மேனாட்டுக்கருவிகளைப் பின்புலத்தில் பயன்படுத்தக்கூடாது.
12. பாரம்பரியமாகப் பழக்கத்தில் உள்ள கலை வடிவங்களைப் படைக்கும்போது பாரம்பரியமாகப் பயன்படுத்தப்பட்டு வரும் ராகம், தாளம் தவிர புதிய ராகம், புதிய தாளம் மற்றும் மிகைப்படியான நாட்டிய அசைவுகள் முதலியன அனுமதிக்கப்படமாட்டாது.
13. ஓரங்க நாடகம் அல்லது ஒரு நீண்ட நாடகத்தின் ஏதேனும் ஒர் அங்கம் – 30 மணித்துளிக்குள்ளாக படைப்பதற்கு அனுமதிக்கப்படும். 7 பேர் மேடையிலும், மேடையின் பின் 3 பேர் என 10 பேர் மட்டுமே ஒர் அணியில் இடம்பெற முடியும் பின்னணி

இசைக்கு (**ஒலிப்பதிவு நாடா**) பயன்படுத்தலாம் சிறந்த நடிகன் / நடிகையினைத் தேர்வு செய்து தனிப்பரிசும் வழங்கலாம்.

14. குழுப்பாடல் / தேசபக்தி பாடல் ஆகியவற்றில் மாணவன் மாணவி கலந்த அணி அனுமதிக்கப்படும். தேசிய ஒருமைப்பாட்டு உணர்வு கொண்ட பாடல்கள் மட்டுமே அனுமதிக்கப்படும்.

    தேசபக்திப் பாடல்கள் தமிழில் மட்டுமே இருக்க வேண்டும் என்பது அவசியமல்ல, எந்த மொழியிலும் பாடப்படலாம்.

15. பாரம்பரியக்கருவிகள், உபகரணங்கள் (குத்துவிளக்கு, செப்புக்குடம் போன்று) ஏவையேனும் தேவைப்படின் அவற்றைப் போட்டியாளர்கள் ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும். குழுவாக படைக்கப்படும் கலை இனங்களில் குழுவில் பங்குகொள்ளும் அனுமதிக்கப்பட்ட அனைவருக்கும் (தகுதிஇருப்பின்) சான்றிதழும், பரிசும் வழங்கப்பட வேண்டும்.

16. இந்துஸ்தானி இசை, (வாய்ப்பாட்டு) இந்துஸ்தானி இசைக்கருவி பாடல் மற்றும் இவை போன்ற கலை வடிவங்களைப்போட்டி இனங்களில் இடம்பெறாதவை என இனம் காணப்பட்டால் அவற்றைக் காட்சிப்படைப்பாகப் படைக்கலாம். போட்டியின் விதிகளுக்கு இவை உட்படா. மேலும் போட்டியின்தகுதித் தேர்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.

17. நடுவர்களை நியமிப்பதில் அதிக கவனம் செலுத்துதல் வேண்டும். போதுமான தகுதியும் அனுபவமும் நிறைந்தவரே நடுவராகத் தகுதியுடையவராகக் கருதப்படுவார். நடுவரை நியமிப்பதில் உள்ள நெறிமுறை, விதிமுறை யாவும் முற்றிலுமாகக் கடைபிடிக்கப்பட வேண்டும்.

18. ஒவ்வொரு கலை இனத்திற்கும் கட்டாயமாக 3 நடுவர் நியமிக்கப்பட வேண்டும். மூவரும் தனித்தனியாக அமர்ந்து பிறரைக் கலந்தாலோசிக்காமல் தமது மதிப்பீட்டை மதிப்பெண்ணாகப் பதிவு செய்தல் வேண்டும். ஒருவர் இடும் மதிப்பெண் மற்றவருக்குத் தெரியக் கூடாது.

19. நடுவர்களின் மதிப்பீடுகள் ஒருங்கிணைக்கப்பட்டு (மூன்று நடுவரின் மதிப்பெண்களும் கூட்டப்பட்டு அதன் சராசரி காணப்படும்) – அதன் அடிப்படையில்தான்முடிவுகள் அமையும். ஒரே மதிப்பெண்ணை இருவர் பெற்றிருந்தால் – (Tie Breaker) நடுவர்களைக் கலந்து இறுதி முடிவு எடுக்கப்பட வேண்டும்.

20. முடிவுகள் யாவும் அறிவிக்கப்படும் முன் மந்தணமாக (இரகசியமாக) வைக்கப்பட வேண்டும்.

**Annexure I**

# மதீப்பீடு செய்வதற்கான விதிமுறைகள்

**1. வாய்ப்பாட்டு – செவ்வியல் இசை :**

| | |
|---|---|
| குரல் | 20 மதிப்பெண் |
| சுதி | 20 மதிப்பெண் |
| லயம் | 20 மதிப்பெண் |
| பாடலின் வரி சுத்தம் | 20 மதிப்பெண் |
| கற்பனை சுரம் | 20 மதிப்பெண் |

**2. வாய்ப்பாட்டு – மெல்லிசை:**

| | |
|---|---|
| குரல் | 25 மதிப்பெண் |
| சுதி | 25 மதிப்பெண் |
| தாளம் | 25 மதிப்பெண் |
| பாடலின் வரி சுத்தம் | 25 மதிப்பெண் |

**3. கருவி இசை (காற்றிசைக் கருவி) :**

| | |
|---|---|
| சுதி | 25 மதிப்பெண் |
| லயம் | 25 மதிப்பெண் |
| பாவம் | 25 மதிப்பெண் |
| கற்பனை சுரம் | 25 மதிப்பெண் |

**4. கருவி இசை (துந்தி இசைக் கருவி) :**

| | |
|---|---|
| சுதி | 25 மதிப்பெண் |
| லயம் | 25 மதிப்பெண் |
| பாவம் | 25 மதிப்பெண் |
| கற்பனை சுரம் | 25 மதிப்பெண் |

**5. கருவி இசை : (Percussion type) (தோல் கருவிகள்) தாளக் கருவிகள்**

| | |
|---|---|
| சுதி | 25 மதிப்பெண் |
| லயம் | 25 மதிப்பெண் |
| இசைக்கும் தன்மை | 25 மதிப்பெண் |
| பாட்டுக்கு வாசிக்கும் முறை (Presentation) | 25 மதிப்பெண் |

**6. கருவி இசை (அரிய வகைக் கருவிகள் ) :**

| | |
|---|---|
| சுதி | 25 மதிப்பெண் |
| லயம் | 25 மதிப்பெண் |
| இசைக்கும் தன்மை | 25 மதிப்பெண் |
| பாட்டுக்கு வாசிக்கும் முறை (Presentation) | 25 மதிப்பெண் |

**7. நாட்டியம்: பரதம் / குச்சிப்புடி/ மோகினியாட்டம்**

| | |
|---|---|
| தாளம் | 20 மதிப்பெண் |
| பாவம் | 20 மதிப்பெண் |
| அங்க சுத்தம் | 20 மதிப்பெண் |
| ஒப்பனை மற்றும் உடையலங்காரம் | 20 மதிப்பெண் |
| நடன வெளிப்பாடு | 20 மதிப்பெண் |

**8. கிராமிய நடனம் / பழங்குடியினர் நடனம்**

(கரகாட்டம்/மயிலாட்டம்/ஒயிலாட்டம்/தேவராட்டம்)

| | |
|---|---|
| பக்கவாத்தியங்கள் – பாரம்பரிய இசைக்கருவிகளுடன் | 20 மதிப்பெண் |
| வகைமைக்கு ஏற்ற ஆட்ட அடவுகள் | 20 மதிப்பெண் |
| ஒப்பனை மற்றும் உடையலங்காரம் | 20 மதிப்பெண் |
| நடன வெளிப்பாடு | 20 மதிப்பெண் |
| தாளம் | 20 மதிப்பெண் |

**9. வில்லுப்பாட்டு:**

| | |
|---|---|
| சுதி | 20 மதிப்பெண் |
| லயம்/தாளம் | 20 மதிப்பெண் |
| மொழிச் சுத்தம் | 20 மதிப்பெண் |
| கருத்து வெளிப்பாடு | 20 மதிப்பெண் |
| இசை, ஒருங்கமைப்பு (குழுச் செயல்பாடு) | 20 மதிப்பெண் |

**10. பேச்சுப் போட்டி:**

| | |
|---|---|
| மேடை அச்சமின்றிப்பேசும் திறமை | 20 மதிப்பெண் |
| ஒலிப்புமுறை | 20 மதிப்பெண் |
| மொழித் தூய்மை | 15 மதிப்பெண் |
| உரைத் தெளிவு | 15 மதிப்பெண் |
| பேச்சின் தொடரோட்டம் (Continuity) | 15 மதிப்பெண் |
| குரல் ஏற்றஇறக்கம் | 15 மதிப்பெண் |

**11. கட்டுரைப் போட்டி**:

| | |
|---|---|
| கருத்து | 30 மதிப்பெண் |
| மொழி நடை | 20மதிப்பெண் |
| வெளிப்பாடு | 20 மதிப்பெண் |
| இலக்கணப் பிழையின்மை | 20 மதிப்பெண் |
| கையெழுத்து | 10 மதிப்பெண் |

**12. ஒப்புவித்தல் (அனைத்து வகைகளும்)** :

| | |
|---|---|
| மனப்பாடம் | 25 மதிப்பெண் |
| உச்சரிப்பு | 25 மதிப்பெண் |
| குரல் வெளிப்பாட்டின் ஆளுமை | 25 மதிப்பெண் |
| வெளிப்பாட்டின் நயம் | 25 மதிப்பெண் |

Note: இசையோடு பாடவேண்டும் என்பது அவசியம் இல்லை. கவிதை, கவிஞர் பற்றி சிறிய அளவில் அறிமுக உரை தேவை.

**13. இசையரங்கம் (Orchestra)** : மெல்லிசை

| | |
|---|---|
| சுதி | 25 மதிப்பெண் |
| தாளம் | 25 மதிப்பெண் |
| பாடகர்கள், இசைக்கருவிகள் ஒருங்கமைப்பு | 25 மதிப்பெண் |
| பாட்டின் பொருள் | 25 மதிப்பெண் |

**14. குழு நடனம் (அனைத்து வகைக்குழுநடனங்களும்)** :

| | |
|---|---|
| ஆடுபவர்களின் ஒத்திசைவு | 20 மதிப்பெண் |
| ஒப்பனை மற்றும் உடையலங்காரம் | 20 மதிப்பெண் |
| நடன வெளிப்பாடு | 20 மதிப்பெண் |
| வகைமைக்கு ஏற்ற அடவுகள் | 20 மதிப்பெண் |
| பக்க வாத்தியங்கள் பாரம்பரிய இசைக்கருவிகள் | 20 மதிப்பெண் |

**15. நாடகம்**: (Drama / வீதி நாடகம்)

| | |
|---|---|
| கதைக்கரு | 20 மதிப்பெண் |
| நடிப்பு ஒருங்கிணைப்பு | 20 மதிப்பெண் |
| குரல் எடுப்பு | 20 மதிப்பெண் |
| இயக்கம் | 20 மதிப்பெண் |
| உடல் மொழி | 20 மதிப்பெண் |

**16. கோலாட்டம் / களியல் / கட்டைக்குச்சி**

| | |
|---|---|
| தாளம் | 25 மதிப்பெண் |
| கோல் கையாளும் விதம் | 25 மதிப்பெண் |
| அடவுகள் | 25 மதிப்பெண் |
| நடன வெளிப்பாடு Total presentaion | 25 மதிப்பெண் |

**17. பலகுரல்**: (mimicry)

| | |
|---|---|
| கருத்து | 25 மதிப்பெண் |
| போலச் செய்தல் திறன் (mimicry) | 25 மதிப்பெண் |
| உடல் மொழி | 25 மதிப்பெண் |
| குரல் வளம் | 25 மதிப்பெண் |

**Note:** பிறரைப் புண்படுத்தும்படியாகவோ, கேலி செய்வது போலவோ இருத்தல் கூடாது.

**18. தனியாள் நடிப்பு**: (Mono Act / Miming)

| | |
|---|---|
| கதை | 25 மதிப்பெண் |
| உடல் மொழி | 25 மதிப்பெண் |
| உரையாடும் திறன் | 25 மதிப்பெண் |
| மேடை ஆளுமைத் திறன் | 25 மதிப்பெண் |

**Note:** பிறரைப் புண்படுத்தும்படியாகவோ, கேலி செய்வது போலவோ இருத்தல் கூடாது.

**19. குழுப் பாடல்கள்**:

| | |
|---|---|
| சுதி | 20 மதிப்பெண் |
| தாளம் | 20 மதிப்பெண் |
| அனைவரும் ஒத்திசையாக பாடுதல் | 20 மதிப்பெண் |
| ஒலிப்புமுறை மற்றும் கருத்து | 20 மதிப்பெண் |
| பாவம் (மெய்ப்பாடு) | 20 மதிப்பெண் |

**20. கார்ட்டூன்**: (**கேலிச்சித்திரம்** )

| | |
|---|---|
| ஓவியத் திறன் | 25 மதிப்பெண் |
| தலைப்பையொட்டி வரைதல் | 25 மதிப்பெண் |
| பாத்திரப்படைப்பு | 25 மதிப்பெண் |
| நகைச்சுவை உணர்வு | 25 மதிப்பெண் |

**21. வண்ணம் தீட்டுதல் (கொடுக்கப்படும் படத்தில்)**

| | |
|---|---|
| சீரான வண்ணப்பூச்சு | 25 மதிப்பெண் |
| சுற்றுக் கோட்டிற்கு உள்ளேயே தீட்டுதல் | 25 மதிப்பெண் |
| பொருள் சார்ந்த வண்ணம் | 25 மதிப்பெண் |
| ஒளியும் நிழலும் | 25 மதிப்பெண் |

**22. வரைந்து வண்ணம் தீட்டுதல்**

**(ஏதாவது ஒரு பூ/பறவை/பழம்/காய்கறி)**

| | |
|---|---|
| வரைவின் நேர்த்தி | 20 மதிப்பெண் |
| சீரான வண்ணப்பூச்சு | 20 மதிப்பெண் |
| சுற்றுக் கோட்டிற்கு உள்ளேயே தீட்டுதல் | 20 மதிப்பெண் |
| பொருள் சார்ந்த வண்ணம் | 20 மதிப்பெண் |
| ஒளியும் நிழலும் | 20 மதிப்பெண் |

**23. மனத்தில் பதிந்த இயற்கைக் காட்சியை வரைதல் (Landscape)**

| | |
|---|---|
| தொலைவு அண்மைக் காட்சியமைவு | 25 மதிப்பெண் |
| ஒளியும் நிழலும் (வண்ணத்தில்) | 25 மதிப்பெண் |
| படைப்பாற்றல் | 25 மதிப்பெண் |
| இசைவுப் பொருத்தம் | 25 மதிப்பெண் |

**24. தலைப்பையொட்டி வரைதல்**

**(வாழ்க்கை அனுபவம் சார்ந்த தலைப்பு ஒன்றிற்கு ஏற்ப வரைதல்)**

| | |
|---|---|
| தொலைவு அண்மைக் காட்சியமைவு | 25 மதிப்பெண் |
| ஒளியும் நிழலும் (வண்ணத்தில்) | 25 மதிப்பெண் |
| படைப்பாற்றல் | 25 மதிப்பெண் |
| இசைவுப் பொருத்தம் | 25 மதிப்பெண் |

**25. எதிர்காலக் கனவை வரைதல்**

**(அறிவியல், கலை, பண்பாடு, பொது வாழ்க்கை போன்றவை சார்ந்த எதிர்காலச் சிந்தனைகள்)**

| | |
|---|---|
| தொலைவு அண்மைக் காட்சியமைவு | 25 மதிப்பெண் |
| ஒளியும் நிழலும் (வண்ணத்தில்) | 25 மதிப்பெண் |
| படைப்பாற்றல் | 25 மதிப்பெண் |
| இசைவுப் பொருத்தம் | 25 மதிப்பெண் |

**26. கதை / கவிதை எழுதுதல்**

| | |
|---|---|
| கருத்து | 25 மதிப்பெண் |
| நயம் (புதுமை – உத்தி) | 25 மதிப்பெண் |
| மொழி ஆளுமை | 25 மதிப்பெண் |
| இலக்கணப் பிழையின்மை | 25 மதிப்பெண் |

**27. காண்கலை வகைகள்**

| | |
|---|---|
| படைப்பு / வெளிப்பாடு | 25 மதிப்பெண் |
| புதுமை – உத்தி | 25 மதிப்பெண் |
| இசைவுப் பொருத்தும் | 25 மதிப்பெண் |
| நேர்த்தி (Perfection) | 25 மதிப்பெண் |

**28. தனிப் பாடல்கள்**

| | |
|---|---|
| சுதி | 25 மதிப்பெண் |
| தாளம் | 25 மதிப்பெண் |
| ஒலிப்புமுறை மற்றும் கருத்து | 25 மதிப்பெண் |
| பாவம் (மெய்ப்பாடு) | 25 மதிப்பெண் |

**29. இசைக்கச்சேரி / நாதசங்கமம் / பேண்டு வாத்தியம்**

| | |
|---|---|
| சுதி | 25 மதிப்பெண் |
| தாளம் | 25 மதிப்பெண் |
| இசைக் கருவிகள் ஒருங்கமைப்பு | 25 மதிப்பெண் |
| நேர்த்தி (ஒழுங்குமுறை) | 25 மதிப்பெண் |

**30. நகைச்சுவை வழங்குதல்**

| | |
|---|---|
| நகைச்சிறப்பு | 25 மதிப்பெண் |
| பாவம் (மெய்ப்பாடு) | 25 மதிப்பெண் |
| நடிப்பு உடல் மொழி | 25 மதிப்பெண் |
| கற்பனை | 25 மதிப்பெண் |

**(யாரையும் புண் படுத்துவதாக அமையக்கூடாது)**

**31. பொம்மலாட்டம்**

| | |
|---|---|
| பொம்மைகளின் நேர்த்தி | 25 மதிப்பெண் |
| சொல்லும் கருத்து | 25 மதிப்பெண் |
| தாளம் / பாடல் வளம் | 25 மதிப்பெண் |
| பொம்மை இயக்கத்தின் நேர்த்தி | 25 மதிப்பெண் |

**32. மாறுவேடப் போட்டி**

| | |
|---|---|
| வேடப்பொருத்தம் | 25 மதிப்பெண் |
| நடிப்பு | 25 மதிப்பெண் |
| பேச்சாற்றல் | 25 மதிப்பெண் |
| மேடை ஆளுமை (அச்சமின்மை) | 25 மதிப்பெண் |

**33. கையெழுத்துப் போட்டி**

| | |
|---|---|
| கேட்டெழுதும் திறன் | 25 மதிப்பெண் |
| தெளிவு | 25 மதிப்பெண் |
| எழுத்துகளின் வடிவம் | 25 மதிப்பெண் |
| பிழையின்மை | 25 மதிப்பெண் |

**34. Photography / Digital art**

| | |
|---|---|
| புகைப்படத்தின் தெளிவு | 25 மதிப்பெண் |
| புகைப்படத்தின் கருத்து | 25 மதிப்பெண் |
| ஒளி / நிழல் ஒருங்கமைப்பு | 25 மதிப்பெண் |
| இயல்புடைமை (Originality) | 25 மதிப்பெண் |

(வகுப்பு 1 & 2 சொல்வதனை எழுதுவதற்கு 20 சொல் (ஓரெழுத்து முதல் ஐந்தெழுத்துக்குள்)

(வகுப்பு 3 முதல் 5 வரை 10 வரிகள்)

**35.** மதிப்பீடு செய்வதற்கான விதிமுறைகள் விளக்கப்படாத கலையினங்கள் எவையேனும் இருப்பின் அவற்றிற்கான மதிப்பீட்டு முறைகள் இங்கே குறிப்பிட்டுள்ள மதிப்பீட்டு விதிமுறைகளுக்கு ஏற்ப, வடிவமைக்கப்பட்டு மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் முன் அனுமதியினைப் பெறவேண்டும்.

மேலும் ,மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் முன் அனுமதி இன்றி எந்தவொரு மதிப்பீட்டு முறையையும் மாற்றியமைக்க அனுமதி இல்லை.

**Annexure II**

**(கல்வி மாவட்டப்பெயர்)** கல்வி மாவட்டப் பள்ளிக்கலை விழா ( கல்வியாண்டு)

_________________

**(கலைவிழா நடைபெறும் பள்ளியின் பெயர்)** :

____________

## <u>சேர்க்கைப் படிவம்</u>

பள்ளியின் பெயர்: _______________ குறிப்பீட்டு எண் (Code): _________________

தொலைபேசி எண்கள்: ___________________ தலைமை ஆசிரியர்: பெயர்:_______________

எண் : ______________

பொறுப்பாசிரியர் பெயர்: ___________ பொறுப்பாசிரியர் தொலைபேசி எண்: ____________

| **(நிகழ்ச்சி அலுவலகப் பயனுக்கு மட்டும்)** | **வ. எண்** | **போட்டியாளர் பெயர் – பெரிய எழுத்தில் (ஒரு மாணவன் பெயர் ஒரு முறை மட்டுமே எழுதப்படவேண்டும்)** | **வகுப்பு** | **ஆண்/பெண்** | **போட்டியிடும் கலை வடிவங்களின் குறியெண்கள்** | | | **Remarks** |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |

- பங்கெடுக்கும் : ஆண்கள் _____ பெண்கள் ______ மொத்தம்: ___________

பிரிவு வாரியாகப் பங்கு பெறுவோர் = பிரிவு 1 ___________ பிரிவு 2____________

பிரிவு 3 _____பிரிவு 4_______

மொத்தம்

- தொகுப்பு விவரம் இறுதிப்பக்கத்தில் மட்டும் எழுதினால் போதும்
- அணித்தலைவர்/ பொறுப்பாசிரியர் பெயர் மற்றும் கையொப்பம் ____________

### <u>உறுதி மொழி</u>

மேலே கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் யாவும் பள்ளிப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளவாறே உள்ளன எனவும், இவ்விவரங்கள் நான் அறிந்தவரை உண்மையானவை எனவும், இவற்றில் எவ்வித ஒளிவுமறைவு, மாற்றமோ இல்லை எனவும் உறுதியளிக்கிறேன்.

**நாள்:** **தலைமையாசிரியர் கையொப்பம்**

**இடம்:** **அலுவலக முத்திரை**

**மாதிரிப்படிவம்** **Annexure III**

## தமிழகப் பள்ளிக் கலைத் திருவிழா

## மேல் முறையீட்டிற்கான விண்ணப்பம்

1. பங்கு பெற்ற மாணவன் பெயர் :
2. பள்ளியின் பெயர் :
3. மாவட்டத்தின் பெயர் :
4. பங்குகொண்ட கலை இனம் :
5. அரங்கத்தின் பெயர் மற்றும் எண்:
6. பதிவு எண் :
7. குறியீட்டு எண் (Code No) :
8. போட்டி நடைபெற்ற நிலை பள்ளி / கல்வி மாவட்டம் / மாவட்டம் / மாநில நிலை
9. போட்டியில் பெற்ற நிலை :
10. போட்டி நடைபெற்ற நாள் மற்றும் நேரம் :
11. போட்டி முடிவுகள் அறிவிக்கப்பட்ட நாள் மற்றும் நேரம் :
12. மேல் முறையீட்டிற்கான காரணம் :
13. போட்டியாளரின் கையொப்பம் :
14. அணி மேலாளரின் பெயர் மற்றும் கையொப்பம் :
15. மேல் முறையீடு செய்த நாள் மற்றும் நேரம் :

**<u>அலுவலகப் பயன்பாட்டிற்கு மட்டும்</u>**

**<u>For the Office use only</u>**

1. மேல் முறையீட்டு எண் :
2. மேல்முறையீட்டிற்கான தொகை: செலுத்தப்பட்ட ரசீது எண் மற்றும் தேதி } :
3. மேல்முறையீடு பற்றி விரிவாக எடுத்துக் கூறுவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நேரம்: } :
4. குறிப்புகள்: (தீர்ப்பு பற்றி) :

**கையொப்பம்**
**தலைவர் மேல்முறையீட்டு மன்றம்**
**பள்ளி/கல்வி மாவட்டம் / மாவட்டம்/ மாநிலம்**

________________

**(ஊர்ப்பெயர்)**

**மாதிரிப்படிவம்** **Annexure IV**

## தமிழகப் பள்ளிக் கலைத் திருவிழா

## மேல்முறையீட்டு மன்றம் வழங்கும் தீர்ப்பு

பொருள் :

பார்வை :

உத்தரவு எண்: _____________ நாள்:______________

போட்டியாளர் முன்வைத்த முறையீடு:

மேல்முறையீட்டு மன்றத்தின் கருத்து:

மேல்முறையீட்டின் – தீர்ப்பு:

**தலைவர்**
**மேல்முறையீட்டு மன்றம்**
**பள்ளி/கல்வி மாவட்டம் / மாவட்டம்/ மாநிலம்**

**_______________**
**(ஊர்ப்பெயர்)**

போட்டியாளர் பெயர் மற்றும் முகவரி:

**Annexure V**

## தமிழகப் பள்ளிக் கலைத் திருவிழா

## ( நடுவர்/ மேல்முறையீட்டு மன்ற உறுப்பினர்களுக்காக)

**<u>உறுதி மொழி</u>**

தமிழகப் பள்ளிக் கலைவிழா –––– (ஆண்டு) – இல் என் மகன், மகள், என் மாணவர் என் உறவினர் என யாரும் நான் நடுவராக / மேல்முறையீட்டு மன்ற உறுப்பினராக இருக்கும், கலை நிகழ்ச்சியில் / மேல்முறையீட்டின் விசாரணையில் இடம் பெறவில்லை என உறுதியாகக் கூறுகிறேன்.

**நாள்** : **கையொப்பம்**:

**இடம்**: **பெயர்**:

**குறிப்பு**: தேவையற்ற தொடரைக்கோடிட்டு நீக்குக.